# உயர்கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022– 2023

## மானியக் கோரிக்கை எண். 20

## முனைவர் க. பொன்முடி
உயர்கல்வித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்புகள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–13 |
| 2. | தொழில்நுட்பக் கல்வி | 14–44 |
| 3. | கல்லூரிக் கல்வி | 45–65 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 66–132 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 133–137 |
| 6. | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் | 138–144 |
| 7. | தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான (RUSA) மாநில இயக்குநரகம் | 145–151 |
| 8. | அறிவியல் நகரம் | 152–156 |
| 9. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 157–161 |
| 10 | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 162–171 |
| 11. | தமிழ்நாடு மாநில உருது கழகம் | 172 |
| 12. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 173–175 |
| 13 | தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் | 176–178 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 20 – உயர் கல்வி
## 2022–23

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு".

(திருக்குறள் 396)

### 1. முன்னுரை

சமத்துவ நோக்குடைய தமிழக அரசானது, உயர்கல்வித் துறையினை மக்கள் நலனுக்கான ஒரு அமைப்பாகக் கருதி செறிவுமிக்க செயல்திட்டங்களால் சமூகத்தின் பல்வேறு படிநிலைகளிலும் உயர்கல்வியின் விழுமியங்கள் அனைத்து பரிமாணங்களிலும் சென்றடைவதை உறுதிசெய்கிறது. மாணாக்கர் சேர்க்கை, கற்றல்–கற்பித்தல், திறன் மேம்பாடு, அறிவியல்பூர்வமான ஆராய்ச்சிகள், பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஆகியவைகளை விரிவாக்கத்துடன் மேம்படுத்தத் தேவையான நிதி மற்றும் வளங்களைத் தொடர்ந்து அளித்து வருகிறது. இத்திட்டங்களின் செயல்பாட்டுத்

திறனையும், எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிகளையும் மேம்பட்ட செயல்வடிவ வழிமுறைகள் மூலம் உறுதி செய்கிறது.

### 1.1. கல்வி விரிவாக்கல் மற்றும் சிறப்புறுதல்

அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்கள் ஒரு உந்துசக்தியாகத் திகழ்ந்து தமிழகத்தை ஒரு உயர்ந்த இடத்தில் நிலைநிறுத்தியுள்ளது. அதன்வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைத்தல், மேம்பாடு, மென்திறன் பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவைகளுக்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைவருக்கும் சமவாய்ப்பு, எளிய அணுகுமுறை மற்றும் அனைவருக்கும் எட்டக்கூடிய செயல்திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவைகளைப் பல வழிகளிலும் உறுதிசெய்ய அர்ப்பணிப்புடன் உயர்கல்வித் துறை செயல்பட்டுவருகிறது.

1.1.1. உயர்கல்வி நிறுவனங்களை புதுமையான, சிறப்பு மற்றும் வளர்ச்சிக்கான மையங்களாக மாற்ற அரசு விரும்புகிறது. உலக அளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு இணையான தரமான கல்வியை தமிழகத்தின் கிராமப்புற பின்னணியில் இருந்தும், ஒதுக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வழங்க அரசு முயற்சிக்கிறது. உயர்கல்வியின் நோக்கம் இளைஞர்களின் திறமைகளை கண்டறிந்து, அடையாளம் கண்டு மேம்படுத்தி, வளர்ந்துவரும் சவால்களை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவுவதாகும்.

1.1.2. அரசின் திட்டங்கள், சமூக பொருளாதார தடைகளை நீக்கி இளைஞர்களின் தேடல்களை நிறைவேற்றுவது மற்றும் உலகளாவிய அளவுகோல்களின்படி பராமரிப்பதில் கவனம் செலுத்துகிறது. தேசிய மற்றும் உலக நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசு உயர் தகுதிவாய்ந்த திறமையான தொழிலாளர்களை

உருவாக்குகிறது. இளைஞர்கள் தொழில் முனைவோராக மாறுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

1.1.3. தமிழக அரசின் இலக்கு நோக்கிய அணுகுமுறை தமிழகத்தை தேசிய அரங்கில் பெருமைக்குரிய இடத்தில் நிலைநிறுத்தியுள்ளது. உயர்கல்வி பெற்ற மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கையில் தமிழகம் 51.4 என்ற விகிதம் பெற்று, தேசிய சேர்க்கை விகிதமான 27.1 ஐ விட உயர்வான இடத்தில் நிலைபெற்றுள்ளது. பட்டியலின ஆண்கள் மற்றும் பெண்களின் உயர்கல்வி சேர்க்கை நிலை 38.8 மற்றும் 40.4 ஆகவும், பழங்குடியின ஆண்கள் மற்றும் பெண்களின் உயர்கல்வி நிலை 43.8 மற்றும் 37.7 ஆகவும் வளர்ச்சி பெற்றிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்த வளர்ச்சி தேசிய சேர்க்கை வளர்ச்சியினைவிட இருமடங்கு அதிகமாகும்.

1.1.4. அனைத்திந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு 2021–ன் அறிக்கையில் தமிழகத்தின்

பல்வேறு சிறப்புமிக்க அளவீடு காரணிகளை உயர்கல்வி சேர்க்கை எண்ணிக்கையின் (GER 51.4) அடிப்படையில் குறிப்பிட்டுள்ளது. பாலின சமத்துவ குறியீட்டுப் புள்ளி (1.0), பாலினவகை சார்ந்த சேர்க்கை, பெண்கள் மற்றும் ஆண்களின் சேர்க்கை, உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம், ஆராய்ச்சித் துறைகளில் சேர்க்கை மற்றும் பிற முக்கியமான காரணிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.1.5. தமிழ்நாடு தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பில் (NIRF) தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு உள்ளது. ஒட்டுமொத்தப் பிரிவில் 19 நிறுவனங்கள், பல்கலைக்கழகப் பிரிவில் 19 நிறுவனங்களில், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகமாகிய அண்ணா பல்கலைக்கழகம் முதலிடத்தில் உள்ளது. கலை மற்றும் அறிவியல் பிரிவில் 33 நிறுவனங்கள், முதல் 100 தரவரிசைகளுக்குள் உள்ளன. 36 தொழில்நுட்ப

நிறுவனங்கள், முதல் 200 தரவரிசைகளுக்குள் உள்ளன.

## 1.2. நலத்திட்டங்கள்

சமூக அதிகாரம் மற்றும் சமூக நீதியினை நிலைநாட்டுவதில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. உயர்கல்வித் துறையில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட பிரிவு மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்குச் சான்றாக உள்ளன. பல்வேறு நலன்சார் திட்டங்களுள், இலவச பாடப்புத்தகங்கள், மடிக்கணினிகள், பேருந்து பயண அட்டை மற்றும் இளநிலை மற்றும் முதுநிலை பட்ட வகுப்புகளுக்குக் கல்விக் கட்டண விலக்கு, முதல் தலைமுறை பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை, பொறியியல் மாணவர்களுக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/-, அரசு பள்ளி மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் முன்னுரிமை அடிப்படையில் 7.5% உள் ஒதுக்கீடு

வழங்குவதுடன் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களுக்கும் தள்ளுபடி ஆகியவைகள் அடங்கும்.

மேலும், ஐ.ஐ.டி, ஐ.ஐ.எஸ்.சி. மற்றும் ஐ.ஐ.எம் போன்ற தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் இளநிலை பட்டத்தில் சேரும் மாணாக்கர்களின் மொத்த செலவினங்களையும் அரசே ஏற்குமென 2022–23 நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

### 1.3. பாலின சமத்துவம்

திராவிடக் கொள்கைகளைப் பின்பற்றுவதைத் தமிழகம் ஒரு மரபாகக் கொண்டிருப்பதால், பெண் குழந்தைகளின் நலனை அக்கறையுடன் பேணுவதிலும், சமூகத்தில் உள்ள பாலின பாகுபாட்டைக் களைவதிலும், சிறப்பான வளர்ச்சிமிகு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழக அரசு **மூவலூர் ராமாமிர்தம் அம்மையாரின் பெயரில்** மகத்துவமான, திருப்புமுனைகொண்ட ஒரு

திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வியில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் அவர்கள் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு அல்லது தொழிற்பயிற்சி படிப்பினை முடிக்கும் வரையில் தடையின்றி தொடர மாதந்தோறும் ரூ.1000/– அவர்களின் வங்கி கணக்குகளில் நேரிடையாக செலுத்த ஆவன செய்துள்ளது. மற்ற கல்வி உதவித்தொகை மற்றும் நலன்சார்ந்த திட்டங்களில் பயன்பெறும் மாணவிகள் கூடுதலாக மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திட்டத்திலும் பயன்பெறலாம்.

## 1.4. பாடத்திட்டங்கள் மறுசீரமைப்பு

பல்கலைக்கழகங்கள், பெரு நிறுவனங்கள் மற்றும் தொழிற் நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்று பொறியியல், தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் கலை–அறிவியல் பாடத்திட்டங்களை மறுசீரமைப்பு செய்து அதன்மூலம் தொழில்வளர்ச்சியில் ஏற்படும்

முன்னெடுப்புகள், தொழில்துறைகளுக்குத் தேவைப்படும் திறனாளர்களை உருவாக்க செயலாற்றல்மிக்க பல்வேறு முயற்சிகளை உயர்கல்வித்துறை மேற்கொண்டு வருகிறது. மாணாக்கர்களின் மென்திறன்களை வளர்த்தெடுக்கவும், தொழில்துறைத் திறனாளர்களை உருவாக்கவும், தேவைப்படும் பாடங்களை இணைக்கவும் மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற நிலவும் போட்டிகளை எதிர்கொள்ளவும் தேவைப்படும் சிறப்புப் பாடங்களை பாடத்திட்டத்தில் இணைத்து மறுசீரமைப்பு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக அரங்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள கல்வித்தர நிலைத் தரவுகளுக்கு இணையாக தமிழகத்தின் உயர்கல்வித் தரவுகளை உயர்த்திட உயர்கல்வித்துறை பாடுபட்டு வருகிறது.

தொழில் நிறுவனங்களின் வல்லுநர்களின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் பெற்று தொழிற்துறையுடன் ஒருங்கிணைந்த

பாடத்திட்டங்களை உருவாக்க "அறிவுசார் கலந்தாய்வு கூட்டம்" 17.03.2022 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 100–க்கும் மேற்பட்ட பெரு நிறுவனங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்களுடன் தலைசிறந்த கல்வியாளர்கள், முன்னாள் மாணாக்கர்கள் மற்றும் மாணவ பிரதிநிதிகளும் பங்குபெற்று விவாதித்தனர். பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பாடப்பிரிவுகளிலிருந்து மேலும், பல புதிய பாடப்பிரிவுகளை தோற்றுவிப்பதற்கான கருத்துருக்கள் இவ்விவாதத்தில் முன்மொழியப்பட்டன.

மேலும், 2022–23 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள், தங்களது வளாகத்தில் பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மற்றும் TANSIDCO

போன்ற அரசு பொதுத் துறை நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சி மையங்களை தொடங்க பல்கலைக்கழகங்கள் ஊக்கப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5. அறிவுசார் நகரம்

கல்வித் தரத்தை உயர்த்தவும், உலகத் தரத்திலுள்ள திறனாளர்களை ஈர்க்கவும் தமிழக அரசு முனைப்புடன் "அறிவுசார் நகரத்தினை" உருவாக்க அறிவித்துள்ளது. உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற பாடங்கள் ஆகிய கூறுகளை உள்ளடக்கிய அறிவுசார் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இதன் முதன்மை கவனமாகும்.

## 1.6. நிலையான மேம்பாட்டிற்கான இலக்கு நோக்கிய முயற்சிகள்

தமிழகத்தின் மாநில பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டப் படிப்புகளில் நிலையான மேம்பாட்டினை அடைய இலக்கு நோக்கிய

முயற்சியால் பாடத்திட்டங்களிலும், ஆராய்ச்சிகளிலும், புதுமையாக்கலிலும், இணை மற்றும் புற பயன்பாட்டு செயல் நடைமுறைகளிலும் சீரமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். வழிகாட்டுதல், பயிற்சிகளை வழங்குதல், ஆசிரிய திறன் மேம்பாட்டு வகுப்புகள் மற்றும் கொள்கை வரைவாக்கம் ஆகிய செயல்பாடுகளை தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் மேற்கொள்கிறது. அறிவார்ந்த சமூகத்தினை உருவாக்கவும், தமிழகத்தினை அறிவுசார்ந்த தளங்களில் விரிவாக்கம் செய்யவும் தமிழக அரசு செறிவு பொதிந்த கட்டமைப்பை மறுசீரமைக்கும் முயற்சிகளைத் திட்டமிட்டுள்ளது.

# நிதி ஒதுக்கீடு 2022–23

மானியக் கோரிக்கை எண்.20, உயர் கல்வித்துறை என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.5668.88 கோடி ஆகும்.

| வரிசை எண் | துறை தலைமையின் பெயர் | வரவு செலவு ஒதுக்கீடு ரூபாய் (கோடியில்) |
|---|---|---|
| 1. | உயர் கல்வித்துறை, தலைமைச் செயலகம் | 7.20 |
| 2. | கல்லூரிக் கல்வி இயக்ககம் | 3259.43 |
| 3. | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் | 1552.44 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 698.18 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 15.65 |
| 6. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 3.89 |
| 7. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 5.79 |
| 8. | அறிவியல் நகரம் | 1.69 |
| 9. | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் | 124.24 |
| 10. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 0.37 |
| | **மொத்தம்** | **5668.88** |

# 2. தொழில்நுட்பக் கல்வி

## 2.1. முன்னுரை

தொழில்நுட்பக் கல்வியானது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப்பங்கு வகிப்பதுடன், அன்றாட உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப வளர்ச்சி அடைந்து வருகிறது. கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் சமூகத்திற்கு இடையேயான தொடர்பு, திறன் வாய்ந்த மனிதவளம் மற்றும் திறமையான தொழில்நுட்ப வல்லுநர்களை உள்ளடக்கிய மாநிலத்தை உறுதி செய்கிறது. பொறியியல், தொழில்நுட்பம், மேலாண்மை, கட்டடக்கலை, நகர திட்டமிடல், உணவக மேலாண்மை மற்றும் உணவு வழங்கல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளைச் சார்ந்த பட்டய மற்றும் பட்டப்படிப்பு ஆகியவை உயர்கல்வித் துறையின் கீழ் வழங்கப்படுகின்றன. தொழில்மயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கலில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு தொழில்நுட்பத்துடன் கூடிய

தொழில் முனைவோர்க்கான திறன்களை மாணாக்கர்கள் தொழில்நுட்பக் கல்வி மூலமாக பெற முடிகிறது. புதுமையான திட்டங்கள் அரசால் வடிவமைக்கப்பட்டு வருவதன் மூலம் மாநிலத்தின் இளைஞர்களை தற்சார்புடையவர்களாகவும் புதுமையான செயல்முறைகளை மேற்கொள்வதன் மூலம் சமூகத்தில் நிலவும் வாழ்க்கை நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கும் வழிவகுக்கிறது.

இம்மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், 1957 ஆம் ஆண்டு அக்டோபர், 14ஆம் தேதி நிறுவப்பட்டது. இவ்வியக்ககம், அனைத்து கல்வி மற்றும் அது தொடர்பான செயல்பாடுகளை கண்காணித்து, ஒருங்கிணைத்து, கல்வித் தரத்தை சீர்படுத்துவதோடு புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், பாடத்திட்டத்தின் வடிவமைப்பு, பாடத்திட்டங்கள் மற்றும் பாடத்தின் உள்ளடக்கத்தின் திருத்தம்,

தரநிலைகளை ஒழுங்குபடுத்துதல், உட்பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான வழிகாட்டுதல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு திறன்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல், கல்வி நிலையங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்துவதற்கான பயிற்சி வழங்குதல் போன்ற செயல்களை மேற்கொண்டுவருகிறது.

இவ்வியக்ககம் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் மற்றும் அலுவலகத்தில் கணினி பயன்பாடு குறித்த சான்றிதழ் படிப்பு ஆகியவற்றிற்கான தேர்வுகளை நடத்தி வருகிறது.

அதிக அளவிலான பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை இம்மாநிலம் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

## தமிழ்நாட்டில் உள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 2021–22 (தற்போதைய நிலை)

| வகைப்பாடு | பட்டப்படிப்பு கல்லூரிகள் | பட்டயப் படிப்பு கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | பொறியியல் மற்றும் கட்டடக்கலை கல்லூரிகள் | பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப நிறுவனம் | |
| அரசு கல்லூரிகள் | 11 | 51 | – | 62 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 3 | 34 | – | 37 |
| சுயநிதி கல்லூரிகள் | 539 | 406 | 14 | 959 |
| இணைவு கல்லூரிகள் | – | 4 | – | 4 |
| அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள் | 20 | – | – | 20 |
| மொத்தம் | 573 | 509 | | 1082 |

## 2.2. அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடப் பிரிவுகள்

### 2.2.1. தொழிற்கல்வி நிறுவனங்கள்

சர்வதேச தரத்திற்கு இணையாக தொழில்நுட்பத்தில் தரமான உயர்கல்வியை வழங்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட பொறியியல் கல்லூரிகள், இன்றைய தொழில்நுட்ப சமூக வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் பட்டதாரிகள் மற்றும் அறிஞர்களை உருவாக்குகின்றன. பொறியியல் கல்லூரிகள் சீரிய திறனுடைய ஆசிரியர்களுடன், நன்கு அமைக்கப்பட்ட உள்கட்டமைப்பு, செய்முறை பயிற்சிக்கான வழிவகைகள் மற்றும் அறிவாற்றலுக்கான சாதகமான சூழ்நிலையை வழங்குவதுடன் சுய சிந்தனையுடன் கூடிய மாணவ சமுதாயத்தை உருவாக்குகிறது. மாணவ சமுதாயத்தின் நலனுக்காக, ஈரோட்டில் உள்ள சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்லூரியானது, அரசு பொறியியல் கல்லூரியாக 2021–22–ஆம் கல்வியாண்டு முதல் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழகத்தில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் 15,892 மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்பிலும், ஏழு அரசு பொறியியல் கல்லூரிகளில் 701 மாணாக்கர்கள் முதுநிலை பட்டமேற்படிப்பிலும் பயின்று வருகின்றனர். மேலும், அரசு கல்வி நிலையங்களில் 509 ஆராய்ச்சி அறிஞர்கள் முனைவர் பட்டம் பயின்று வருகின்றனர்.

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. அவற்றில் தற்போது 42,479 மாணாக்கர்கள் பயின்றுவருகின்றனர். தற்போது தொழில் நிறுவனங்கள், வரைபடங்களைப் படித்து விளக்குவது, மதிப்பீடு செய்தல், செலவு மற்றும் ரசீது தயார் செய்தல், மேற்பார்வை, அளவீடு, சோதனை, பழுதுபார்ப்பு, பராமரிப்பு போன்றவற்றில் சிறப்புத் திறன்களைப் பெற்ற பட்டயப்படிப்பு படித்தவர்களை, வேலைக்கு அமர்த்த விரும்புகின்றன. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அமைப்பியல், மின்னியல்,

இயந்திரவியல், மின்னணுவியல், கணினி அறிவியல், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், கருவியியல் மற்றும் கட்டுப்பாடு, கட்டடக்கலைக்கான உதவி, தோல் தொழில்நுட்பம், நெசவு தொழில்நுட்பம் போன்ற துறைகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளை வழங்கி வருகின்றன. மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மகளிருக்கான பட்டயப்படிப்புகளை வழங்கி வருகின்றன. தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு இடையே ஒரு இடைநிலை இணைப்பாக தொழிற்சாலைகள் / நிறுவனங்களின் தள மற்றும் கள செயல்பாடுகளை மேற்கொள்ள, திறன் அடிப்படையிலான மனிதவளத்தை உருவாக்குவதே பலவகை தொழில்நுட்பக் கல்வியின் நோக்கமாகும்.

### 2.2.2. தொழிற்படிப்புகள்

தொழில்நுட்பக்கல்வி பாடத்திட்டங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் வடிவமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு வருவதால், மாணாக்கர்களுக்கு அடிப்படை பொறியியல் கல்வியில்

வலுவான அடித்தளம் அமைய வழிவகுக்கிறது. தொழிற்பயிற்சியானது மாணாக்கர்களுக்கு நம்பிக்கையை புகுத்துதலுக்கும், தெளிவான புரிதலுடன் கற்றுக்கொள்ளும் விருப்பத்தை ஏற்படுத்தவும், சரியான தொழிலை தேர்ந்தெடுக்கவும், தொழிற்துறையில் உள்ள சவாலை எதிர்கொண்டு, வெற்றி பெறுவதற்கும் அளிக்கப்படுகிறது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 102 பட்டயப் படிப்புகளும், 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் 11 இளநிலை பொறியியல் பட்டபடிப்புகளும் மற்றும் ஏழு அரசு பொறியியல் கல்லூரிகளில் 17 முதுநிலை பொறியியல் பட்டமேற் படிப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

## 2.3. நலத்திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகள்

### 2.3.1. அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் முன்னுரிமை அடிப்படையில் 7.5% இடங்கள் அளித்தல்

அரசு பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கை எடுப்பதற்காக, இளநிலை

தொழிற்கல்வி படிப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் அரசு பள்ளி மாணாக்கர்கள் சேர்க்கை பெறுவதற்காக "தமிழ்நாடு அரசு பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கை சட்டம் – 2021" இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட முழுக்கட்டணத்தையும் அரசே ஏற்கும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 2021–22 ஆம் கல்வியாண்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கைப்பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு மேற்காண் கட்டணங்களை வழங்கும் பெருட்டு, ரூ.74.28 கோடி நிதியினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இந்த ஒதுக்கீட்டின் கீழ் 7,876 அரசு பள்ளி மாணாக்கர்கள் பொறியியல் கல்லூரிகளில்

சேர்க்கை பெற்றுள்ளனர். இவர்களில் 161 அரசு பள்ளி மாணாக்கர்கள் அண்ணா பல்கலைக்கழக துறைகளில் 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்றுள்ளனர்.

## 2.3.2. போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்திக் கொள்ள தீவிர பயிற்சி அளித்தல்

2021–22 ஆம் ஆண்டிலிருந்து 10 அரசு பொறியியற் கல்லூரிகளில் பயிலும் 500 மாணாக்கர்களுக்கு போட்டித் தேர்வுகளான, CAT/ GMAT / GRE / IELTS மற்றும் TOEFL தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி அளிக்க ரூ.42.12 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தீவிர பயிற்சியானது மாணவர்களை போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறச் செய்வதோடு மட்டுமல்லாமல், அம்மாணாக்கர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நற்பெயர் மிக்க நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதை அதிகப்படுத்துகிறது.

### 2.3.3. இறுதியாண்டு படிக்கும் பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு வெளிநாட்டு மொழி கற்றுக் கொடுத்தல்

அரசு பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு படிக்கும் மாணாக்கர்களுக்கு வேலை வாய்ப்பு திறன்கள் மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து வெளிநாட்டு மொழிகளான ஜெர்மனி, ஜப்பானியம், பிரெஞ்ச் மற்றும் சீன மொழிகள் கற்றுதரப்படுதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3.4. பட்டயப் படிப்புகளை தமிழ் வழியில் அறிமுகப்படுத்துதல்

சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் துறைகளில் தமிழ் வழியில் பட்டயப் படிப்புகள் 2022–23–ஆம் கல்வியாண்டு முதல் அரசால்

தொடங்கப்படவுள்ளன. இதன் மூலம் மாணாக்கர்கள் பாடங்களின் கருத்துகள் மற்றும் பயன்பாடுகளை தமிழில் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும். மேலும், இது மாணாக்கர்களுக்கு மாநில அரசு வேலைகளை தமிழ்வழியில் கல்வி பயின்றோருக்கான உள் ஒதுக்கீட்டு பிரிவில் பெற உதவும்.

### 2.3.5. மகளிருக்கான பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்துதல்

மாணவியர்களின் மொத்த சேர்க்கையினை அதிகரிப்பதற்கும், சிறந்த வேலை வாய்ப்புகளை பெறுவதற்காக உயர்கல்வியில் மாணவியர்கள் அதிக அளவில் சேர்வதை ஊக்குவிப்பதற்கும், மகளிருக்காக (1) சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் (கணினி கொண்டு வடிவமைத்தல்) பாடப்பிரிவு (2) சென்னை, மாநில வணிகப் பயிலகத்தில் அலுவலக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாடுகள் பாடப்பிரிவு (3) கோயம்புத்தூர், அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இதயத் துடிப்பு பதிவி

தொழில்நுட்பப் பாடப்பிரிவு (4) மதுரை, தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இணையவலை வடிவமைப்பு தொழில்நுட்பப் பாடப்பிரிவு (5) நாகர்கோவில், அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் உயிர் மருத்துவ மின்னணுவியல் பாடப்பிரிவு (6) சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் அகவனப்பியல் பாடப்பிரிவுகளும் 2022–23 ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்படவுள்ளன.

### 2.3.6. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள்

தரமிக்க கல்வியை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு, தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய திறன்மிகு வகுப்பறைகள் கூடுதலாக தேவைப்படுவதால், தமிழகத்தில் உள்ள 50 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10.00 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள் 2021–22 ஆம்

ஆண்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திறன்மிகு வகுப்பறைகள், புத்தகம் மூலம் பெற்ற அறிவும், கோட்பாடு உள்ளடக்கமும், மாணாக்கர்களின் வாழ்க்கை பயன்பாட்டிற்கும் கற்றலுக்கும் உதவக்கூடும். மேலும், மென்பொருள் மற்றும் தூண்டுதலை ஏற்படுத்தும். உள்ளடக்கங்கள் மூலம் இணைய பாதுகாப்பு (Cyber Security) பயிற்சி, எரிவாயு வெட்டும் செயல்முறை (Gas Cutting Process), ஃபோர்க் லிப்ட் (Forklift) பயிற்சி, லீன் மேனுபாக்சரிங் (Lean Manufacturing), கட்டடப் பாதுகாப்பு, கியர்பாக்ஸ் (Gear Box), பவர் ஜெனரேடர் (Power Generator) போன்றவை திறன்மிகு வகுப்பறைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

### 2.3.7. பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கு கூடுதல் பாடத்திட்டங்கள்

அரசானது, தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும், சிறந்த வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் மாணவர்களின் செயல்திறனை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை

உணர்ந்துள்ளது. மாணாக்கர்களின் வேலை வாய்ப்பு பெறுவதற்கான திறனை அதிகரிக்கவும் மற்றும் பணிபுரிவதற்கான அறிவாற்றலை ஏற்படுத்தும் நோக்கத்துடன், ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணாக்கர்களுக்கு 2021-22 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலைகளின் தேவைகளின் அடிப்படையில், கூடுதல் பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. பாடப்பிரிவுகளின் விவரம் பின்வருமாறு:-

| கூடுதல் பாடங்கள் | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|
| **இயந்திரவியல்**<br>CNC Operator Machining Technician Level 3<br>320 Hours | 1200 |
| **மின்னியல் மற்றும் மின்னணுவியல்**<br>Electrical Assembly Operator - Control Panel<br>200 Hours | 900 |
| **மின்னியல் மற்றும் தொடர்பியல்**<br>PLC Assembly Operator - 200 Hours | 900 |

## 2.3.8. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டு மையங்களை நிறுவுதல்

2021–22 ஆம் ஆண்டில், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து மண்டலங்களில், 457 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை உள்ளடக்கி தொழில் முனைவு மேம்பாட்டு மையங்களை (Hubs) நிறுவியுள்ளது. இதன்மூலம் அனைத்து முதல்வர்களுக்கான மேலாண்மை பயிற்சி, ஆசிரியர்களுக்கான மேம்பாட்டு பயிற்சி மற்றும் மாணாக்கர்களுக்கான மூன்று நாட்கள் மின்தலைமை பட்டறை பயிற்சி ஆகியவை அளிக்கப்பட்டன. இதுகாறும், சிந்தனை செயல்பாட்டுக்கான 950 புதிய கண்டுபிடிப்புகளுக்கான எண்ணங்கள் மாணவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்கள் சிந்தனை முகாமிற்கு

அனுப்பப்படுவார்கள். இளம் மாணாக்கர்களிடம் தொழில் முனைவு மற்றும் தொழில் துவங்கும் பண்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

### 2.3.9. பி.காம். பட்டப்படிப்பில் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கை

பட்டயப் படிப்புகளில் மொத்த சேர்க்கை விகிதத்தினை அதிகரிப்பதற்கும் மற்றும் பட்டயப் படிப்பு முடித்த மாணாக்கர்களை உயர்கல்வியில் சேர்வதற்கு ஊக்குவிப்பதற்கும், வணிகப் பயிற்சியில் பட்டயப் படிப்பு / நவீன அலுவலக நடைமுறை பட்டயப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு, பி.காம். பட்டப்படிப்பில் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கையினை 2021-22 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இம்மாணாக்கர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநில பல்கலைக்கழகங்கள் வழங்கும் அனைத்து இளநிலை வணிகப் பாடப்பிரிவுகளில் நிறுவன செயலாண்மை பாடப்பிரிவு (Corporate Secretaryship)

உட்பட 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் இரண்டாம் ஆண்டு நேரடிச் சேர்க்கையில் சேர்வதற்கு தகுதியுடையவர்களாவர்.

**2.3.10. முதல் தலைமுறைப் பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை**

முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கும் திட்டமானது பட்டதாரிகளற்ற குடும்பத்தில் உயர்கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் துவங்கப்பட்டது. அவ்வாறு தொழிற்முறைப் படிப்புகளில் ஒற்றைச் சாளர முறையில் சேரும் முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம் முழுவதையும் மாநில அரசே ஏற்கிறது. சாதி மற்றும் வருமானத்தை பொருட்படுத்தாமல் இந்த உதவித் தொகையானது மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் கல்வியாண்டில் 28.02.2022 அன்று வரை 1,11,038 மாணாக்கர்களுக்கு

ரூ.266.60 கோடி அளவில் கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.11. இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள்

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை மூலம் பி.இ. / பி.டெக். பட்டபடிப்புகள் மற்றும் எம்.பி.ஏ / எம்.சி.ஏ / எம்.இ. / எம்.டெக். போன்ற முதுநிலை பட்டப்படிப்புகளில் சேர்ந்து பயில்வதற்கு ஏதுவாக கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வின் மூலம் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களுக்கும், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2021–22–ஆம் கல்வியாண்டில் 33 மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 2.3.12. பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்

பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலானோர் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினை சேர்ந்தவர்களாவர். இப்பிரிவினை சேர்ந்த மாணாக்கர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2008–09 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2021–22ஆம் கல்வியாண்டில் 42,479 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.3.13. இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல்

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கையை அதிகரிக்கவும், அவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் 2007–08–ஆம் கல்வி ஆண்டிலிருந்து அரசு பலவகை தொழில்நுட்பக்

கல்லூரிகளில் முதலாமாண்டு பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஆங்கிலம், பொறியியல், இயற்பியல், பொறியியல் வேதியியல் மற்றும் பொறியியல் கணிதம் ஆகிய பாடங்களுக்கான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2021–22 ஆம் கல்வியாண்டில் 11,839 மாணாக்கர்கள் ரூ.37.97 இலட்சம் செலவினத்தில் பயனடைந்துள்ளனர்.

### 2.3.14. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை

கிராமப்புறங்களிலிருந்து வரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினைச் சேர்ந்த மாணாக்கர்கள் பட்டயக் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு 2009–10 ஆம் கல்வியாண்டு முதல் 14 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறையினை 3,360 கூடுதல் மாணாக்கர்கள் சேர்க்கை இடங்களுடன் அறிமுகம் செய்து

அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2021–22 ஆம் கல்வியாண்டில் 2,081 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.3.15. இலவசப் பேருந்து பயணச் சலுகை

மாணாக்கர்கள் எவ்வித நிதிச் சுமையுமின்றி தங்களது பயிலகங்களுக்கு சென்றடைய, 2007–08 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப்படிப்பு பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2021–22 ஆம் கல்வியாண்டில் 41,978 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.3.16. புனையமைப்பு ஆய்வகம் நிறுவுதல்

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் தனித்திறமைகள், கற்றல் உத்திகள், படைப்பாற்றல், ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் ஆகியவற்றை செயல்முறை அறிவுத்திறனுடன் செயல்படுத்த

காரைக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு பொறியியல் மற்றும் மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழிற்சாலைகளுடன் இணைந்து புனையமைப்பு ஆய்வகம் (Fab Makerspace Lab) நிறுவப்படவுள்ளது.

### 2.3.17. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி

நன்கு பயிலும் திறமையான மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் பி.இ. / பி.டெக். பொறியியல் படிப்புகளை பயில்வதற்கு அரசு ரூ.50,000/– நிதியுதவி வழங்குகிறது. முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகை பெறும் மாணாக்கர்களும் இந்த நிதி உதவி பெற தகுதி உடையவர்களாவர்.

### 2.3.18. பட்ட மேற்படிப்பிற்கான நிதியுதவி திட்டம்

2021–22 ஆம் ஆண்டு முதல் பொறியியல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு நிதியுதவி பெறும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணாக்கர்களின்

எண்ணிக்கை 600–லிருந்து 1200–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.6,000/– நிதியுதவி பெறுவதற்காக அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழக துறைகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் சேரும் மாணாக்கர்களின் பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில், முதல் 300 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். பின்பு, அரசு பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் மாணாக்கர்களில் இருந்து மட்டும் பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் அடுத்த 300 மாணாக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படுவார்கள். இத்திட்டத்திற்காக அரசு ரூ.8.64 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

### 2.3.19. ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கான கல்வி உதவித் தொகை திட்டம்

ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆதி திராவிட மாணாக்கர்களை மையமாகக்

கொண்டு உயர்கல்வியில் அவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுயநிதி கல்வி மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கலான கல்வி நிறுவனங்களில் அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்ற பொறியியல் மற்றும் பட்டயப்படிப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கு, கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டாய மற்றும் திருப்பி அளிக்க இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மாணாக்கர்களுக்கு கல்வி உதவிப்படியும் வழங்கப்படுகிறது. கடந்த கல்வியாண்டில் 73,012 பொறியியல் கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.490.29 கோடியும், 49,117 பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வி

உதவித்தொகையாக ரூ.178.70 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.20. விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் சிறந்த கணினித் திறனைப் பெறுவதற்கும், மின் வளங்களைப் பயன்படுத்துவதற்கும், விலையில்லா மடிக்கணினிகளை வழங்கும் திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறுகின்றனர்.

## 2.4. மின் ஆளுமை

### 2.4.1. தமிழ்நாடு பொறியியற் சேர்க்கை, 2021

2019–20 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பட்டுவருகிறது. கொரோனா

பெருந்தொற்று காரணமாக 2020−21 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடர்பான விண்ணப்பப்பதிவு, சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு, பதிவு செய்த மாணவர்களுக்கு ரேண்டம் எண் (Random Number) வழங்குதல், தரவரிசைப்பட்டியல் வெளியீடு, சிறப்பு பிரிவினர்களுக்கான கலந்தாய்வு, பொது கலந்தாய்வு, தொழில்முறை கலந்தாய்வு, துணை கலந்தாய்வு, SCA காலியிடத்திற்கான SC வகுப்பு கலந்தாய்வு, தற்காலிக ஒதுக்கீடு பட்டியல் வெளியிடுதல் போன்ற அனைத்தும் இணையவழி மூலமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, 2021−ஆம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு பொறியியல் சேர்க்கையும் இணையவழி மூலமாகவே முழுமையாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. 78,490 மாணாக்கர்கள் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்றுள்ளனர்.

மேலும் 2021−22 ஆம் கல்வியாண்டில் B.Arch. பட்டப்படிப்பிற்கான முதலாம் ஆண்டு சேர்க்கை, B.E. / B.Tech. படிப்பிற்கான இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை

மற்றும் பகுதிநேர சேர்க்கை, MBA / MCA பட்டப் படிப்புகளுக்கான முதலாம் ஆண்டு சேர்க்கை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு / இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை / பகுதி நேர பட்டயப்படிப்பு சேர்க்கை ஆகிய அனைத்தும் இணையவழி மூலமாக நடைபெற்றுள்ளன.

### 2.4.2. நிறுவன வள திட்டமிடல் மென் பொருளுடன் (LMS & ERP) ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பை நிறுவுதல்

தமிழகத்தில் உயர்கல்வித் துறையில் அரசின் இலக்குகளை அடைவதற்காக, சமூகத்தின் தேவைக்கு ஏற்ப கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குமுறைகளை வகுத்து, பல்வேறு திட்டங்களை வகுப்பதற்கு ஏதுவாக, நிறுவன வள திட்டமிடுதல், மென்பொருளுடன் (LMS & ERP) ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பானது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் நிறுவப்படவுள்ளது. இது தொடர்பான திட்டத்தினை செயல்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமித்து வடிவமைப்பு

மற்றும் திட்டச் செயல்பாட்டிற்கான வளச் செலவுக்காகவும், தமிழகத்தில் உள்ள நிறுவன வள திட்டமிடல் தீர்வுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பின் தேர்வு மற்றும் அறிமுகம் போன்றவற்றிற்காகவும், 2021–22 ஆம் ஆண்டில் அரசு ரூ.4.09 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

### 2.4.3. காணொலி காட்சி மையம்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள காணொலி காட்சி மையம் வளர்ந்து வரும் மின்மய கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இந்த காணொலி காட்சி மையம் மூலம், மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு பொறியியல் துறைகளில் தலைசிறந்த நிபுணர்களால் விரிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் கல்லூரிகளை கண்காணிக்கவும் இவ்வசதியை பயன்படுத்துகிறது.

## 2.4.4. பட்டயப் படிப்பு மாணாக்கர்களுக்கு மென்பொருள் பயிற்சி அளித்தல்

2021–22–ஆம் ஆண்டில், தொழில்நுட்ப கல்வி இயக்ககம் மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் 2021–ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் வரை ஒரு வருடத்திற்கு அனைத்து 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் மென்பொருள் பயிற்சி அளிப்பதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இப்பயிற்சியில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 21,343 மாணாக்கர்கள் சேர்ந்து, **Python 3.4.3, Arduino, Q CAD, Scilab Libre Office Suite** போன்ற மென்பொருள் பயிற்சிகளை முடித்துள்ளார்கள்.

## 2.5. உள்கட்டமைப்பு

### 2.5.1. அரசு பொறியியற் கல்லூரிகளில் கூடுதலாக விடுதி கட்டடங்களை கட்டுதல்

மாணாக்கர்கள் விடுதிகளில் தங்கி பயிலும் தேவை அதிகரித்திருப்பதை கருத்திற் கொண்டு அவர்களுக்கு தகுந்த சூழலுடன் போதுமான தங்குமிடம் வழங்கவும், 2021–22 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், சேலம், காரைக்குடி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள நான்கு அரசு பொறியியல் கல்லூரிகளில் கூடுதல் விடுதி கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.34.10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 3. கல்லூரிக் கல்வி

3.1. 1965 ஆம் ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்ககம், கல்லூரிக் கல்வியை தனித்துவமாக நிர்வகிக்கும் நோக்கத்துடன், முந்தைய பொதுக் கல்வி இயக்ககத்தை பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் என்று இரண்டாகப் பிரித்து உருவாக்கப்பட்டது. மானுடவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் புதுமையான திட்டங்களை அறிமுகப்படுத்தி, உயர்கல்வித் துறையில் மிகவும் முன்னேறிய மாநிலமாகவும் அதிகம் விரும்பப்படும் மாநிலமாகவும் தமிழகத்தை முன்னோக்கி கொண்டு வர அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்போது 907 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 11 உடற்கல்வி கல்லூரிகள், நான்கு கீழ்த்திசை கல்லூரிகள், இரண்டு சமூகப்பணி பள்ளிகள் மற்றும் 649 கல்வியியல் கல்லூரிகள் என மொத்தம்

1,573 கல்லூரிகள், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

### 3.2. மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம் (GER)

உயர்கல்வியில் அகில இந்திய அளவில் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம் 27.1 என்று இருக்கும் நிலையில், தமிழக அரசின் முன் முயற்சி மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, தமிழகம் 51.4 என்ற விகித அளவில் சிறப்பான இடத்தில் உள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2006-07 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட சுழற்சி முறைத் திட்டமே, அதனை தொடர்ந்து வந்த ஆண்டுகளில் மொத்த சேர்க்கை விகிதத்தில், தமிழகம் உயர்கல்வியில் சிறப்பான இடத்தையும், அதிக விகிதமும் பெற முக்கிய காரணமாக அமைந்தது. வேகமாக மாறிவரும் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, மொத்த மாணாக்கர் சேர்க்கை விகிதத்தைத் தொடர்ந்து உயர்த்தும் பொருட்டு, தமிழக அரசு, இன்றைய கால

கட்டத்திற்குத் தேவையானதும், தொழிற்சாலைகளின் தேவைக்கேற்பவும் கூடுதலாக புதிய கல்லூரிகளையும் புதிய பாடத்திட்டங்களையும் தொடங்கியுள்ளது.

### 3.3. முழுமையான கல்வி

தரமான உயர்கல்வி வழங்குவதை முன்னுரிமையாகக் கொண்ட தமிழக அரசு, சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஈடு கொடுத்து, சமுதாயத்தின் அனைத்து தரப்பினரின் வாழ்வியல் தரத்தை உயர்த்தும் வகையில், முழுமையான கல்வியைத் தர விழைகின்றது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மூலம், முழுமையான வகையில் தரமான உயர்கல்வியை பயில்வதன் மூலம் சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினரின் நலன்கள் அரசின் தொடர் முயற்சிகளால் சாத்தியமாகிறது.

## 3.4. செவித்திறன் குறைந்த மாணாக்கர்களுக்கான பி.காம். மற்றும் பி.சி.ஏ சிறப்புப் பாடப்பிரிவுகள்

மாநிலக் கல்லூரியானது, 181 ஆண்டுகளை கடந்த பழமையான தனித்துவம் நிறைந்த கல்லூரியாகும். 2007 ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாநிலக் கல்லூரியில் பி.காம் (செவித்திறன் குறைவு) மற்றும் பி.சி.ஏ. (செவித்திறன் குறைவு) பாடப்பிரிவுகள் துவங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி, இவ்விரண்டு சிறப்பு பாடப்பிரிவுகளும் தொடங்கப்பட்டன. இந்நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி, தற்போது 175 மாணவர்கள் உயர்கல்வி பயின்று வருகின்றனர்.

செவித்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கான சேவைகளை அங்கீகரித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற சுதந்திர தின

விழாவில் "சிறந்த நடைமுறைகள்" விருதினை இக்கல்லூரிக்கு வழங்கினார்கள்.

### 3.5. பாரதி இளம் கவிஞர் விருது

இந்த மண்ணின் மகத்தான மாமனிதர்களை போற்றுவதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. எனவே, மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழாவை நினைவுகூறும் வகையில், கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கவிதைப் போட்டியை நடத்தி ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு "பாரதி இளம் கவிஞர்" என்ற விருதுடன் தலா ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையினையும் வழங்க உள்ளது. கவிதைப் போட்டிகள் நடத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

மாவட்ட அளவிலான கவிதைப் போட்டிகள் ஆகஸ்ட் 2022 க்கு முன்பாக நடத்தப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து, மாநில அளவிலான போட்டிகள் ஆகஸ்ட் 2022 இல் நடத்தப்படும். செப்டம்பர் 2022 இல்

பாரதி இளம் கவிஞர் விருது வழங்கப்படும். இந்த ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இவ்விருது வழங்கப்படும்.

## 3.6. உயர்கல்வி வழியே மகளிருக்கு அதிகாரமளித்தல்

தமிழக அரசின், பெண்களுக்கான உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பயனுள்ள பல திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மூலம் அதிக பெண்கள் உயர்கல்வி பயில ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்நடவடிக்கைகள் சமூகத்தில் மகளிர் உயர்நிலையை அடையவும், பொருளாதார சுதந்திரத்தை அடையவும், வழிகோலுகிறது. மகளிருக்கான கல்லூரிகள் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளதன் மூலம் பெண்களின் இடைநிற்றல் தவிர்க்கப்பட்டுள்ளதுடன், பெண்கள் அதிகாரம் பெறவும் உதவுகிறது.

அரசின் நிர்வாகப் பணிகளில் மகளிர் பங்கு பெறுவதை ஊக்குவிக்கும் நோக்கில், சென்னை, ராணி மேரிக் கல்லூரி மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி

அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆகியவற்றில் அனைத்திந்திய குடிமைப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் ஒன்றிய பணித் தேர்வுகளில் வெற்றிபெற, இலவசமாக, பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 3.7. கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்குதல்

அரசு கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கட்டணமில்லா பேருந்து அட்டை 2007–08 ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரியில் பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட கல்லூரிகள் மூலம் கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டை வழங்கப்படுகிறது. 2021–22 ஆம் கல்வியாண்டில் கட்டணமில்லா பயண சலுகை திட்டத்தின் மூலம் 1,39,446 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.8. கட்டணமில்லாக் கல்வி

2007–08 ஆம் கல்வி ஆண்டு முதல், அரசு, அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்புகள் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணத்தை அரசு தள்ளுபடி செய்துள்ளது. மேலும் 2010–11 ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு கல்லூரிகளில் முதுநிலை பாடப்பிரிவினை பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் மூலம் பொருளாதாரத்தில் ஏழ்மையான பெற்றோரின் நிதிச் சுமையை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

## 3.9. தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகை

தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 1971–72 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு வருடமும்

தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகளில் தமிழ் வழியில் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் ஊக்கத் தொகையாக ஓராண்டிற்கு ரூ.900/- என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் ஆண்டில் 47,072 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் ரூ.4.24 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.10. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணாக்கர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

அரசு கல்லூரிகளில், குறிப்பாக கிராமபுறங்களைச் சார்ந்த ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் பல்கலைக்கழகத் தேர்வுகளைப் எதிர்கொள்வது கடினமாக உள்ளது. இந்த பாடங்களை அவர்கள் முழுமையாக புரிந்துகொண்டு பயிலும் வகையில், வகுப்பு நேரங்களுக்கு அப்பாற்பட்டும், வார இறுதி

நாட்களிலும் சிறப்பு வகுப்புகள் மூலம், மாணாக்கர்களுக்கு கூடுதலாக சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் பிற மாணவர்களுடன் போட்டியிடவும், பல்கலைக்கழக தேர்வுகளில், உயர் மதிப்பெண்கள் பெறவும், இப்பயிற்சி வகுப்புகள் உதவிபுரியும்.

### 3.11. பாடப்புத்தகங்களை தமிழில் மொழிப்பெயர்த்தல்

தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து, 100 பாடப்புத்தகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. தற்போது, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மொழிபெயர்ப்பாளர்களைக் கண்டறிந்து, பாட வாரியாக மொழி பெயர்ப்பு பணிகளையும் ஒதுக்கீடு செய்துள்ளது. பாடப்புத்தகங்களின் மொழியாக்கம் செயல்பாட்டில் உள்ளது. மேலும், ஜீன் 2022 க்கு முன் 50 பாடப்

புத்தகங்களின் மொழிபெயர்ப்பை முடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.12. வேலைவாய்ப்பு முகாம்

கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்கள் படிப்பு நிறைவுற்றதும் வேலை வாய்ப்பு பெற சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணாக்கர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக கல்லூரிகளிலுள்ள வேலைவாய்ப்பு மையங்கள் புத்துயிரூட்டப்பட்டு ஆர்வமுள்ள கல்லூரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 3.13. ஆராய்ச்சிப் படிப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை (முனைவர் பட்ட ஆராய்ச்சி)

உதவித் தொகை வழங்கும் திட்டம் மூலம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் ஆராய்ச்சி மாணவர்களின் ஆராய்ச்சி செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஒரு முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவருக்கு, ஓராண்டிற்கு ரூ.60,000/- படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.1.65 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 275 முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.14. 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் படிப்பு (Ph.D) தொடங்குதல்.

ஆராய்ச்சியில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உயர்த்தவும், ஆராய்ச்சிபடிப்பை ஊக்குவிக்கவும், மாணவர்களின் ஆராய்ச்சி திறனை வெளிக்கொணரவும், 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ், வணிகவியல், தாவரவியல், தகவல்

தொழில்நுட்பம், விலங்கியல், உயிர்வேதியியல், ஆங்கிலம், இயற்பியல் மற்றும் சர்வதேச வணிகவியல் ஆகிய துறைகளில் முனைவர் படிப்புகளை (Ph.D) துவங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. 2021-22 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### 3.15. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய இளநிலைப் பாடப்பிரிவுகள் தொடங்குதல்.

மொத்த மாணாக்கர் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கவும், சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பினை உருவாக்கும் விதத்திலும் விழுப்புரம், அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 4 புதிய இளநிலைப் பாடப்பிரிவுகளும், சென்னை, நந்தனம், அரசு கலைக் கல்லூரியில் 3 புதிய இளநிலைப் பாடப்பிரிவுகளும் 2021-22 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

### 3.16. மாணாக்கர் சேர்க்கையில் இணைய வழி விண்ணப்பப் பதிவு

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைப் பெற விழையும் மாணாக்கர்களுக்கு இயங்கலை (Online) வழியாக விண்ணப்பம் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெருந்தொற்று காலத்தில் தடங்கலற்ற இந்த இயங்கலை விண்ணப்பப் பதிவு தளம் மாணாக்கர்களின் சிரமத்தைக் குறைத்து, எளிதாகவும், விரைவாகவும், அவர்களின் திறன் கைப்பேசி வாயிலாகவும் பதிவு செய்ய வழிவகுத்தது. 2021–22 ஆம் கல்வியாண்டில் இணையவழியாக 5,70,601 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 3.17. மின் ஆளுமை

விரைவான மற்றும் பயனுள்ள நிர்வாகம், நிர்வாக செயல்பாடுகளை துரிதப்படுத்துதல், வெளிப்படை தன்மையுடன் தரவுகளை விரைந்து பெறுதல் உள்ளிட்டவைகளுக்காக, மின் ஆளுமை திட்டத்தின்

முதல் கட்டமாக ரூ.99.80 இலட்சம் மற்றும் இரண்டாம் கட்டமாக ரூ.1.32 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அலுவலக நிர்வாகம் மற்றும் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களை கல்லூரிக் கல்வி இயக்குநரகத்துடன் ஒருங்கிணைப்பதற்கான மென்பொருளை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வடிவமைத்து வருகிறது.

## 3.18. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

உள்ளார்ந்த, சீரான உயர்கல்வி வழங்குவதற்காகவும், மாணவர் சேர்க்கை விகிதத்தினை உயர்த்துவதற்காகவும் 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை 2022–23 ஆம் கல்வியாண்டில் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த புதிய கல்லூரிகளில், திருவாரூர் மாவட்டம்–கூத்தாநல்லூரில் ஒரு புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மற்றும்

விருதுநகர் மாவட்டம்—திருச்சுழி, கள்ளக்குறிச்சி மாவட்டம்—திருக்கோவிலூர், ஈரோடு மாவட்டம்—தாளவாடி, திண்டுக்கல் மாவட்டம்—ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி மாவட்டம்—மானூர், திருப்பூர் மாவட்டம்—தாராபுரம், தருமபுரி மாவட்டம்—ஏரியூர், புதுக்கோட்டை மாவட்டம்—ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம்—சேர்க்காடு ஆகிய ஒன்பது இடங்களில் அமையவுள்ள அரசு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் அடங்கும். ஒவ்வொரு கல்லூரிக்கும் முதலாமாண்டிற்கு 17 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் 17 ஆசிரியரல்லா பணியிடங்கள் வீதம், 10 கல்லூரிகளுக்கு மொத்தம் 170 உதவி பேராசிரியர்கள் மற்றும் 170 ஆசிரியரல்லாப் பணியிடங்களை தோற்றுவித்தும், 2022—23 ஆம் ஆண்டிற்கு தொடர் செலவினமாக ரூ.21.23 கோடி மற்றும் தொடரா செலவினமாக ரூ.3.60 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

## 3.19. புதியதாக தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடம் கட்டுதல்

2020–21 ஆம் கல்வியாண்டில் 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அரசால் தொடங்கப்பட்டன. அவற்றுள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளான, தென்காசி மாவட்டம்– சங்கரன்கோவில், இராணிப்பேட்டை மாவட்டம் – ஜம்புகுளம் (சோளிங்கர்) மற்றும் தென்காசி மாவட்டம் – ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வுசெய்யப்பட்டு 2021–22ஆம் நிதியாண்டில் ரூ.33.99 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 3.20. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

3.20.1. 48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணக்கர்களின் கல்விச் சூழலை மேம்படுத்தும் பொருட்டு, 7,500 இருக்கைகள் மற்றும் மேசைகளை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (TANSI) வாங்குவதற்கு

2021–22 ஆம் நிதியாண்டில் ரூ.8.54 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதே நிதியாண்டில், 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மாணாக்கர்களுக்கான 12,930 இருக்கைகள் மற்றும் மேசைகள், ஆசிரியர்களுக்கான 862 மேசைகள் மற்றும் 862 செராமிக் கரும்பலகைகளை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (TANSI) வாங்குவதற்கு அரசால் ரூ.16.21 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.20.2. தகவல் பரிமாற்றத்தில் தகவல்களை எளிமையாக பெறவும், சேமிக்கவும், தகவல்களை மீட்டெடுக்கவும், மின்னணு நூலகங்கள் உதவிபுரிகின்றன. இது மாணவர்களிடையே நூலகங்களை பயன்படுத்தும் ஆர்வத்தினைத் தூண்டுகிறது. இதனை கருத்தில் கொண்டு நூல்கள் பயிலும் ஆர்வத்தைத் தூண்டவும், அறிவுசார் மாணாக்கர் சமுதாயத்தை உருவாக்குவதற்கும், 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதியதாக

மின்னணு நூலகங்கள் துவங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கென ரூ.93 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.20.3. 10 ஆண்டுகளுக்கு முன்னர் 17 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் தொடங்கப்பட்டன. இம்மின்னணு நூலகங்கள் தொழில்நுட்ப அளவில் பின்தங்கி விட்டதால், தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி வேகத்திற்கேற்ப மாணவர்களால் விரும்பிய அளவில் அவற்றை பயன்படுத்த முடியவில்லை. எனவே, அம்மின்னணு நூலகங்களை மேம்படுத்தவும் மற்றும் உரிமங்களை புதுப்பிக்கவும் அரசால் ரூ.85 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 3.21. பேரிடர் மேலாண்மை மற்றும் தொற்றுநோய் கட்டுப்பாடு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை வாயிலாக கடலோர பேரிடர் ஆபத்து குறைப்புத் திட்டத்தின்கீழ், பேரிடர் ஆபத்து குறித்த

விழிப்புணர்வினை ஏற்படுத்திட தேசிய மாணவர் படை அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சி வழங்கிட ரூ.1.23 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த ஐந்து தேசிய மாணவர் படை அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. 24 மாவட்டங்களில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்குவதற்காக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கோவிட்–19 தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கல்லூரிக் கல்வித் துறைக்கு ரூ.60 இலட்சம் ஒப்பளித்துள்ளது. அரசு கல்லூரிகளில் முகக்கவசம் மற்றும் சுத்திகரிப்பான் வாங்குவதற்கு இத்தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டது.

### 3.22. நாட்டு நலப்பணித் திட்டம்

அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும், மாணவர்களின் ஆளுமையினை மேம்படுத்துவதை முதன்மையாக கொண்டும், அவர்களை

நல்வழிப்படுத்தவும், பல்வேறு நடவடிக்கைகள் மூலம் அவர்களின் மனிதநேயமிக்க பண்புகளை வளர்க்கவும், தேசிய ஒருமைப்பாடு, தேசபக்தி, சகோதரத்துவ மனப்பான்மை, தலைமைப்பண்பு, தன்னம்பிக்கை, சகிப்புத்தன்மை உள்ளிட்டவற்றை கொண்டவர்களாக வளர்த்தெடுக்கவும், அனைவரையும் சமூகப் பொறுப்புள்ள சிறந்த குடிமக்களாக உருவாக்கும் விதமாக சமத்துவ மற்றும் ஒருங்கமைந்த சமூக நலனுக்காகவும் நாட்டு நலப்பணித்திட்டம் சிறப்பாக இயங்கி வருகிறது.

## 4. பல்கலைக்கழகங்கள்

உயர்கல்வித்துறை ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன :–

1. சென்னை பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. அண்ணா பல்கலைக்கழகம்
4. பாரதியார் பல்கலைக்கழகம்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. அழகப்பா பல்கலைக்கழகம்
8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9. பெரியார் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13. அண்ணாமலை பல்கலைக்கழகம்

## 4.1. சென்னை பல்கலைக்கழகம்

4.1.1. சென்னை பல்கலைக்கழகம் 1857 இல் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் அனைத்து தென்னிந்திய பல்கலைக்கழகங்களின் தாயாக விளங்குகிறது. இதன் இணைப்பு அதிகாரம் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களை வரம்பெல்லையாக கொண்டுள்ளது. 1900 ஆம் ஆண்டு முதல் சென்னை பல்கலைக்கழகமானது ஆராய்ச்சி மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளைக் கற்பிப்பதில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியை உள்ளடக்கிய 72 துறைகளும், 22 ஆராய்ச்சி மையங்களும் மற்றும் 131 இணைப்புக் கல்லூரிகளும் உள்ளன.

4.1.2. இப்பல்கலைக்கழகம் உயர் அங்கீகாரங்களைப் பராமரிப்பதன் தனித்துவத்தைக் கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு தேசிய தரமதிப்பீட்டுக் குழு (National Assessment and Accreditation

Council – NAAC) 'ஏ' தரத்தை வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் தரமதிப்பீட்டில் 4.00–க்கு 3.32 புள்ளிகளைப் பெற்றுள்ளது. தரப்படுத்தப்பட்ட தன்னாட்சியின்கீழ் பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவால் (UGC) 'சிறந்து விளங்கும் திறன் கொண்ட பல்கலைக்கழகம்' (University with Potential for Excellence) என்று அங்கீகரிக்கப்பட்டு இரண்டாம் நிலை தன்னாட்சித் தகுதியினை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

4.1.3. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2021 (National Institutional Ranking Framework (NIRF) 2021)–இல் நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களில் சென்னை பல்கலைக்கழகம் 28 ஆவது இடத்தில் உள்ளது.

4.1.4. உயர்கல்வியை அனைவருக்கும் வழங்க 1981–இல் தொலைதூரக் கல்வி மையம் உருவாக்கப்பட்டது. இது, தற்போது 16 இளங்கலைப் படிப்புகள், 20 முதுகலைப் படிப்புகள், 10 பட்டயம் /

முதுகலைப் பட்டயப் படிப்புகள் மற்றும் இரண்டு சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது.

4.1.5. பல்கலைக்கழக மானியக்குழுவின் இன்ஃப்லிப்நெட்டின் (INFLIBNET) மின்னணு தகவல் வைப்பகமான ஷோத்கங்காவில் (Shodhganga) முனைவர் பட்ட ஆய்வேடுகளைப் பதிவேற்றுவதில் 531 பல்கலைக்கழகங்களில் சென்னை பல்கலைக்கழகம் முதல் இடத்தில் உள்ளது.

4.1.6. ஸ்கோபஸால் பட்டியலிடப்பட்ட (SCOPUS INDEX) முன் மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களில் சென்னைப் பல்கலைக்கழகம் 2,046 (2020 ஜூலை முதல் ஜூன் 2021 வரை) வெளியீடுகளை 157 எச்–இன்டெக்ஸ்களுடன் வெளியிட்டுள்ளது. சென்னை பல்கலைக்கழகம், தேசியக் கல்வி வைப்பகத்தில் (National Academic Depository – NAD) பட்டச் சான்றிதழ்கள் மற்றும் கல்வி சார் ஆவணங்களைப் பதிவேற்றும் பணியின்கீழ் இதுவரை 30,257 ஆவணங்களைப் பதிவேற்றியுள்ளது. மேலும்,

அனைத்து பட்டச் சான்றுகளையும் பதிவேற்றும் பணி நடைபெற்று வருகிறது.

4.1.7. ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் ரூ.50 கோடி நிதியுதவியுடன் ரூசா 2.0 (RUSA 2.0) திட்டத்தின்கீழ் சென்னைப் பல்கலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.1.8. சென்னை பல்கலைக்கழகத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அவை, i) ராமானுஜன் கணிதவியல் உயர்கல்வி நிறுவனம் மற்றும் மும்பை, ஹோமிபாபா தேசிய நிறுவனம் ஆகியவை இணைந்து கூட்டு ஆராய்ச்சியை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம், ii) அரிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை மின்னணுமயமாக்குவதற்கு சென்னை பல்கலைக்கழக நூலகம் மற்றும் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம், iii) புள்ளியியல் துறை மற்றும் இத்தாலி, நேபிள் பல்கலைக்கழகம், எல் ஓரியண்டேல்

இணைந்து சிறப்புக் குறுகிய காலக் கல்வித் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், iv) கணினி அறிவியல் துறை மற்றும் பெருங்குடி ICT அகாடமி இணைந்து புதிய பாடத்திட்டங்களை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், v) கிராமப்புற நிர்வாகத்தில் தொழில்முறை கல்வியை மேம்படுத்துவதற்காக, வணிகவியல் துறை மற்றும் ஹைதராபாத், ஒன்றிய அரசின், உயர்கல்வித் துறையின் மகாத்மா காந்தி தேசிய கிராமக் கல்விகழகத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம்.

### 4.1.9. பல்கலைக்கழக மாணவர் எண்ணிக்கை

சென்னை பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழக துறைகளில் உள்ள முதுநிலை பட்டபடிப்புகளில் உள்ள மாணவர் சேர்க்கை இடங்கள் 4,592 ஆகும். அவற்றில், இக்கல்வியாண்டில் 3,378 மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். இவற்றுள் 670 ஆதிதிராவிடர், பழங்குடியினர் / பட்டியலின மாணவர்களும் அடங்குவர்.

பல்கலைக்கழக துறையில் உள்ள ஆய்வியல் நிறைஞர் பட்டம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 103 ஆகும். பல்கலைக்கழக துறைகள், இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சி படிப்புக்கென பதிவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 3,267 ஆகும்.

## 4.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.2.1. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகத்தின் முதுகலை விரிவாக்க மையமாகத் தொடங்கப்பட்டு 1965 ஆம் ஆண்டு மதுரை பல்கலைக்கழகம் மாநிலப் பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றப்பட்டு, பல ஆண்டுகளாக சீரிய வளர்ச்சியைப் பெற்று வருகிறது.

4.2.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தேசியத்தர மதிப்பீட்டுக்குழு அங்கீகாரத்தின் 4 ஆவது சுழற்சியில் "A++" (சிஜிபிஏ மதிப்பீடு 3.54) அங்கீகாரம் பெற்றது. தற்பொழுது, இந்தியப் பல்கலைக்கழகங்களில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வகை – I என்னும் தகுதி நிலையினைப் பெற்றுள்ளது. 2021 இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், இந்தியாவில் உள்ள 1657 பல்கலைக்கழகங்களில் 63 ஆவது இடத்தையும், 2021 தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் 83 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

4.2.3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 54 முதுகலை, 41 ஆய்வு நிறைஞர், 51 முனைவர் பட்டப்படிப்புகளையும் மற்றும் 18 பட்டய / முதுகலை பட்டயப் படிப்பு / சான்றிதழ் படிப்புகளையும் வழங்கி வருகிறது. தற்போது 3,155 இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2020-21 ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 175 மாணவர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

4.2.4. இப்பல்கலைக்கழகத்தில் ஐம்பத்தேழு ஆசிரியர்கள் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிதியுதவி நிறுவனங்களால் ரூ. 23 கோடி மதிப்பிலான, ஆராய்ச்சிக்கான நிதியினைப் பெற்றுள்ளனர். ஏழு ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் இப்போது மதிப்புமிக்க மூத்த ஆய்வு உதவித் திட்டங்களான INSA, UGC-BSR, DAE-கீழ் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

4.2.5. புதுதில்லியிலுள்ள ரூரல் எலக்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் (RECL), ரூ.7.25 கோடியில்

இப்பல்கலைக்கழக வளாகத்திற்குள் 1 மெகாவாட் சூரிய மின் நிலையத்தை நிறுவியுள்ளது.

4.2.6. தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 8.10.2021 அன்று ரூ.59.52 இலட்சம் மதிப்பில் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் (SDRF) திறன் மேம்பாட்டுக் கூறுகளின் கீழ், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம், பெங்களூரு, மதுரையிலுள்ள எம்.எஸ். செல்லமுத்து ஆராய்ச்சி அறக்கட்டளை ஆகியவை இணைந்து "கோவிட்–19 இன் போது உளவியல் பராமரிப்பு" தொடர்பான கூட்டுத் திட்டத்தை நடத்தியது.

4.2.7. பல்கலைக்கழக மானியக் குழு, 15.11.2021 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலுள்ள "உயிரியல் அறிவியல் இணையத்தளத் தரவக மையத்திற்கு" இரண்டாம் கட்டமாக ஐந்தாண்டுகளுக்கு ரூ.10 கோடியை அனுமதித்து உள்ளது. ரூ.3 கோடியில், இந்தத் திட்டத்தின் கீழ், உயிர்

அறிவியல் புலத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழக பகுதியிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சிப் பணிகளைத் திறம்படச் செய்ய (Networking Resourcing Centre in Biological Sciences) ஊக்குவிக்கிறது.

4.2.8. ரூசா 2.0 திட்டத்தின் கீழ் ரூ. 15 கோடியில் 'தொழில் முனைவோர், கண்டுபிடிப்பு மற்றும் தொழில் மையத்தை' மாணவர்களின் பயன்பாட்டிற்காக 300 கணினிகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த கணினி மற்றும் வெளிநாட்டு மொழி ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

4.2.9. ரூசா 2.0 நிதி உதவியுடன், ரூ. 3.30 கோடி மதிப்பில் ரூசா திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறப்பட்டு அதிநவீன டிஎன்ஏ ஆய்வகத்தை நிறுவியுள்ளது.

4.2.10. DST–PURSE (Phase II) திட்டத்தின் கீழ், Biosafety Level (BSL) – III வசதி எச்ஐவி, மைக்கோபாக்டீரியம் மற்றும் கோவிட்–19 உள்ளிட்ட அபாயகரமான நோய்க்கிருமி மருத்துவ மாதிரிகள் மூலம்

மேம்பட்ட ஆராய்ச்சி செய்ய ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் ஆய்வகத்தை நிறுவியுள்ளது.

4.2.11. மதுரை காமராசர் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்ககம் (DDE) வழங்கும் அனைத்து படிப்புகளுக்கும் நிறுவன வள திட்டமிடுதல் அடிப்படையிலான இணையவழி சேர்க்கை தளத்தை உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

4.2.12. நாட்டிலுள்ள 16 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தை பல்கலைக்கழக மானியக்குழு தேர்வு செய்து 'Scheme for Trans–disciplinary Research for India's Developing Economy' திட்டத்தின் கீழ் செயல்பட மானியமாக ரூ. 1 கோடி அனுமதித்துள்ளது.

4.2.13. மதுரை காமராசர் பல்கலைக்கழக டாக்டர்.தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் நூலகம், தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகத்தின் ஆதரவுடன் 60 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட தமிழ் மற்றும்

ஆங்கில இலக்கியங்களில் 1,243 அரிய நூல்களை மின்னணு மயமாக்கியுள்ளது.

4.2.14. மதுரை காமராசர் பல்கலைக்கழக வேதியியல் புலத்திலுள்ள இயற்கைப் பொருட்களின் வேதியியல் துறையானது, தொழில்துறை உலோக முடிப்பு (Industrial Metal Finishing) என்னும் தனித்துவமான முதுகலை பட்டயப்படிப்பினை வழங்குகிறது. இப்படிப்பினை முடித்த மாணவர்கள் அனைவரும் தானியங்கி வாகனத்துறையில் சேர்ந்து சிறந்து விளங்குகின்றனர்.

## 4.3. அண்ணா பல்கலைக்கழகம்

4.3.1. இந்தியாவின் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களில் மிகப்பெரிய முன்னோடி பல்கலைக்கழகமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. 1794 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதி, செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு அருகிலுள்ள கட்டடத்தில் எட்டு சிறுவர்களுடன் ஒரு நிலஅளவீடு பள்ளி தொடங்கப்பட்டது. இந்த நிலஅளவீடு பள்ளி பொறியியல் கல்லூரியாக மேம்படுத்தப்பட்டது, பின்னர் அது அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்களுடன் இணைந்து 1978 இல் அண்ணா பல்கலைக்கழகமாக உருவானது.

4.3.2. இப்போது, இது இணைவு பல்கலைக்கழகமாக இருப்பதால், மாநிலத்தில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் தனது குடையின் கீழ் கொண்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 13 உறுப்புக் கல்லூரிகள், திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று மண்டல வளாகங்கள் மற்றும் 553 அரசு, அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள் இணைவுபெற்று செயல்படுகிறது. அண்ணா பல்கலைக்கழக துறைகளில் வழங்கப்பெறும் 28 இளநிலை மற்றும் 78 முதுநிலை படிப்புகளில், 10,975 மாணாக்கர்களும் இணைப்புக் கல்லூரிகளில் நடத்தப்பெறும் 47 இளநிலை மற்றும் 63 முதுநிலை படிப்புகளில் 2,92,470 மாணாக்கர்களும் தொலைநிலை கல்வியில் 3,004 முதுநிலை மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேலும் அண்ணா பல்கலைக்கழகத் துறைகளில், 2,267 ஆராய்ச்சி மாணவர்களும் மற்றும் இணைவுபெற்ற கல்லூரிகளில் 10,992 ஆராய்ச்சி மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

4.3.3. அண்ணா பல்கலைக்கழகம் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பு 2021 (NIRF–2021) தரவரிசையில், பல்கலைக்

கழகங்களுக்கிடையே 16 ஆவது இடத்திலும், கட்டடக்கலை கல்வி நிறுவனங்களில் 22ஆவது இடத்திலும், பொறியியல் கல்வி நிறுவனங்களில் 18 ஆவது இடத்திலும், ஒட்டுமொத்த பிரிவில் 25 ஆவது இடத்திலும், மேலாண்மை பிரிவில் 57 வது இடத்திலும் உள்ளது. உலகின் மிகப்பெரிய சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இலக்கியத் தொகுப்பின் அடிப்படையில், குவாக்கரேலி சைமண்ட்ஸ் குறியீடு (QS Index) தரவரிசை 2021 பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் உலகளவில் 801–1000 க்கு இடையிலும், ஆசிய அளவில் 196 வது இடத்தையும் பிடித்துள்ளது.

4.3.4. அண்ணா பல்கலைக்கழகம், 1,67,433 மேற்கோள்களை கொண்ட 29,048 வெளியீடுகளுடன் ஸ்கோபஸ் தரவுத்தளத்தின்படி "h" குறியீட்டில் 111 குறியீடுகளை நாளது தேதி வரை பெற்றுள்ளது. வெளியீடு மற்றும் மேற்கோள்கள் அடிப்படையில்,

மாநில நிதியுதவி பெறும் பல்கலைக்கழகங்களில் நாட்டிலேயே முதல் இடத்தைப் பிடித்தது.

4.3.5. அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி வளாகத்தில் உள்ள விண்வெளி மையம், மெஹர் பாபா போட்டியில் பங்கேற்று, 25 அக்டோபர், 2021 அன்று சிறந்த ட்ரோன் கட்டடக்கலைக்கான விருதைப் பெற்றது. போட்டியின் முக்கிய நோக்கம் ஸ்வார்ம் ட்ரோன் தொழில்நுட்பத்தை, இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைக்கு பயன்படுத்துவதாகும். அத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAV) இந்திய விமானப்படைக்கு வடிவமைப்பது தொடர்பாக இந்திய விமானப்படையுடன் கலந்து ஆலோசித்து வருகிறது.

4.3.6. அண்ணா பல்கலைக்கழகத்தின் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் அமைந்துள்ள வான்வழி ஆராய்ச்சி மையத்தில் (CASR), ரிமோட் பைலட் விமான பயிற்சியை (RPTO) நடத்துவதற்கு 2021 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதி

அன்று சிவில் ஏவியேஷன் டைரக்டர் ஜெனரலால் (DGCA) அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பயிற்சி நாட்டிலேயே முதன்முறையாக இப்பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முதல் தொகுதியில் ரிமோட் பைலட் விமான பயிற்சிக்கு 16 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, தங்களது பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

4.3.7. மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி வளாகம் மற்றும் கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாட்டு மையத்தில் மேக்கர்ஸ் கூடம் நிறுவப்பட்டுள்ளது.

4.3.8. எம்பாசிஸ் லிமிடெட், அமெரிக்கன் மெகாடிரன்ட்ஸ் சர்வதேச இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் இட்டாச்சி வந்த்ரா ஆகிய நிறுவனங்கள், பிரேத்தியேகமாக 16 பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளின் மாணவர்களை வேலைவாய்ப்பிற்கு தெரிவு செய்ய ஒப்புதல்

வழங்கியுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் பல்வேறு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளிலிருந்து 98 மாணவர்களை எம்பாசிஸ் நிறுவனம் தேர்வு செய்துள்ளது. மற்ற இரண்டு நிறுவனங்களும் மாணவர்களை தேர்வு செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

4.3.9. ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் அண்ணா பல்கலைக்கழகம் 18 காப்புரிமைகளை பெற்றுள்ளது மற்றும் 5 காப்புரிமைகளை பெறுவதற்கு கடந்த கல்வியாண்டில் விண்ணப்பித்துள்ளது.

4.3.10. ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு நிதிகள் [FIST] திட்டத்தின் கீழ் அண்ணா பல்கலைக்கழகத்தின் எட்டு துறைகளுக்கு ரூ.8.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்பாட்டில் இருந்துவருகிறது.

4.3.11. ஒன்றிய அரசின், உயிர் தொழில்நுட்பத் துறையின் மூலம், சென்னை அண்ணா

பல்கலைக்கழகத்தின் உயிர் தொழில்நுட்ப மையத்தின், "கட்டமைப்பு தகவல் மற்றும் வேதியியல் உயிரியல்–BIC" என்ற திட்டத்திற்காக, ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.1.99 கோடி நிதி 31.12.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது.

4.3.12. அண்ணா பல்கலைக்கழகத்தின் நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையமானது, இந்திய–ஜப்பான் கூட்டுத் திட்டத்தின் கீழ் "அதிக வெப்பநிலை தெர்மோஸ் மின்சார பயன்பாடுகளுக்கான குறைக்கடத்தி பொருட்களின் வளர்ச்சி செயல்முறை மற்றும் குறைபாடுகள் பற்றிய ஆய்வுகள்" என்ற திட்டத்தினை இரண்டு ஆண்டுகளுக்கு 2021 முதல் 2023 வரை இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிடமிருந்து பெற்றுள்ளது.

4.3.13. அண்ணா பல்கலைக்கழகத்தின் நெசவு தொழில்நுட்பத் துறை, பாலியஸ்டர் துணியை அடிப்படையாகக் கொண்டு, 3.0 மைக்ரான் மற்றும் அதற்கு மேற்பட்ட அளவிலான துகள்களை

வடிகட்டுவதற்காக, மறு பயன்பாட்டு முகக்கவசத்தை உருவாக்கியுள்ளது.

4.3.14. அண்ணா பல்கலைக்கழகத்தால் தானியங்கி வெளிப்புற டெபிபிரிரேலட்டரின் (AED) வடிவமைப்பு மற்றும் வலை அமைப்பிலான ஆடியோமீட்டர் உருவாக்கப்பட்டது. இதற்கு இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியளித்துள்ளது.

4.3.15. இந்திய அறிவியல் கழகம் (IISc), பெங்களூரு மற்றும் சிஎம்சி (CMC), வேலூர் ஆகியவற்றுடன் இணைந்து குழந்தைகளின் பாத குறைபாட்டினை சீர்படுத்தும் சிகிச்சைக்கான கருவியை பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. இதற்கு இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியளித்துள்ளது.

4.3.16. இளம் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடையே பயன்பாட்டு ஆராய்ச்சி மற்றும் தேவை சார்ந்த (சமூகம் அல்லது

தொழில்துறை) தொழில் முனைவோர் கண்டுபிடிப்புகளின் கலாச்சாரத்தை மேம்படுத்தும் நோக்கில் E–YUVA திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்காக, மூன்றாண்டுகளுக்கு ரூ. 2.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் முதல் ஆண்டுக்கு ரூ.38.38 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

4.3.17. பல்கலைக்கழக மானியக் குழு – ஜெர்மனியின் கல்வி பரிமாற்றக் (DAAD) குழுவுடன் இணைந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புறங்களில் நிலத்தடி நீர் நிலைத்தன்மையின் மீது மண்டல காலநிலை மாற்றத்தின் தாக்கம் என்ற தலைப்பிலான இந்தோ–ஜெர்மன் கூட்டாண்மை திட்டத்திற்காக, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு, ஜெர்மனியின் பெர்லினிலுள்ள ஃப்ரீ பல்கலைக்கழகத்துடன் இணைந்து நான்கு வருட காலத்திற்கு ரூ. 2.05 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

## 4.4. பாரதியார் பல்கலைக்கழகம்

4.4.1. பாரதியார் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு ஒன்பது துறைகளுடன் தொடங்கப்பட்டது. தற்போது பல்கலைக்கழகம் 38 துறைகளை உள்ளடக்கி 14 புலங்களைக் கொண்டிருக்கிறது. இத்துறைகள் மூலமாக 54 முதுநிலை மற்றும் மூன்று இளநிலைப் பட்டப்படிப்புகளும், முனைவர் மற்றும் ஆய்வியல் நிறைஞர்பட்ட ஆராய்ச்சிப் படிப்புகளும் நடத்தப்படுகின்றன. நடப்புக் கல்வியாண்டில் (2021–22) 2,649 முதுநிலை மாணவர்கள், 324 இளநிலைப் பட்ட மாணவர்கள், 48 ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்கள் மற்றும் 734 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பயின்று வருகின்றனர்.

4.4.2. பாரதியார் பல்கலைக்கழகம் தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டில் (NAAC) தொடர்ச்சியாக மூன்றாம் சுற்றில் 'A' தகுதி பெற்றுள்ளது.

4.4.3. 2021–ஆம் ஆண்டில் பாரதியார் பல்கலைக்கழகம், இந்திய அரசின் கல்வியமைச்சகத்தின் இந்தியப் பல்கலைக்கழக அளவிலான தரவரிசையில் 14 ஆவது இடத்தையும், தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பில் (NIRF) 22 ஆவது இடத்தையும், ஒட்டுமொத்த ஆராய்ச்சி வரிசையில் 23 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் பாரதியார் பல்கலைக்கழகம் 801 முதல் 1000–க்கு இடைப்பட்ட இடத்தையும், இந்திய அளவில் 18 ஆவது இடத்தையும் உலக இளம் பல்கலைக்கழக வரிசையில் இங்கிலாந்தின் டைம்ஸ் (TIMES) உயர்கல்வி மதிப்பீடு அடிப்படையில் 231 – 300 வரிசையிலும் 2022 ஆம் ஆண்டில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

4.4.4. பல்கலைக்கழகத் துறைகளில் கல்விசார் மேம்பாட்டிற்காகச் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SAP), பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு வழங்கும் குறிப்பிட்ட துறையிலான திறன்மேம்பாட்டு மைய (CPEPA) நிதி

மற்றும் ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி நிதி (DST–FIST) ஆகியவை பாரதியார் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டுள்ளன.

4.4.5. பாரதியார் பல்கலைக்கழகம் மூன்று காப்புரிமைகள் பெற்றுள்ளது. மேலும் 15 காப்புரிமைகளுக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4.4.6. பாரதியார் பல்கலைக்கழகம் RUSA நிதியுதவி மூலமாக பாரதியார் தொழில் முனைவோர், புத்தாக்க வேலை வாய்ப்பு மையம், பாரதியார் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றை தொடங்கியுள்ளது.

4.4.7. இந்திய தேசியக் கவியான மகாகவி பாரதியாரின் பெயரிலுள்ள இப்பல்கலைக்கழகம் அவருக்கு மரியாதை செய்யும் வகையில் மகாகவி பாரதியார் உயராய்வு மையம் ஒன்றினை உருவாக்கி பாரதியின் வாழ்வியல் மற்றும் படைப்பியல் சாதனைகளை வெளிப்படுத்தி வருகிறது.

4.4.8. பாரதியார் நினைவு நூற்றாண்டு விழா மற்றும் 75 ஆவது இந்தியச் சுதந்திரப் பெருவிழாவின் அங்கமாக 'பாரதி கவிக்குரல் மணிக்கூண்டு' உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்விழாவின் ஓர் அங்கமாக மகாகவி பாரதியார் அருங்காட்சியகம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4.4.9. நமது பழமையான பாரம்பரிய மூலிகை மருத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கோடு பல்கலைக்கழகம் மூலிகைத் தோட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

## 4.5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4.5.1. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் 1982 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. பாவேந்தர் பாரதிதாசனின் கவிதையில் இருக்கும் "புதியதோர் உலகம் செய்வோம்" என்னும் அடியினை இலச்சினை மொழியாகக் கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் செயல்படுகிறது.

4.5.2. இப்பல்கலைக்கழகத்தில் நான்கு புலங்கள், 16 பள்ளிகள், 37 துறைகள், அண்மையில் தொடங்கப்பட்ட "பாரதியார் இருக்கை" உட்பட 30 சிறப்பு ஆய்வு மையங்கள், உள் தரமதிப்பீட்டு மையம், அறிவுசார் சொத்துரிமைகள் மையம், பாலியல் வன்கொடுமைத் தடுப்பு மையம் உள்ளிட்ட 12 மையங்கள், பல்கலைக்கழக நிதிநல்கை குழுவின் நிதியுதவியுடனான மனிதவள மேம்பாட்டு மையம் உட்பட அனைத்து வளங்களுடன் இயங்கும் 10 மையங்கள் உள்ளன.

4.5.3. 2021 ஆம் கல்வியாண்டில் தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) தரவரிசையில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இந்தியப் பல்கலைக்கழக அளவில் 57 ஆவது இடத்தையும் தமிழகப் பல்கலைக்கழக அளவில் 5 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம், தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவின் திருத்தியமைக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் "A+" தரத்தினைப் பெற்ற முதல் மாநிலப் பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்தில் நேரற்ற இயக்கவியலைத் தம் சிறப்புக்களமாகக் கொண்டு செயல்படும் சிறப்புநிலைப் பேராசிரியர் முனைவர் எம்.இலட்சுமணன் என்பவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதினை பெற்றுள்ளார்.

4.5.4. இப்பல்கலைக்கழகத்தின் தொழில் முனைவு மற்றும் தொழில் மையம் ரூசா (RUSA) 2.0 திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் கல்வியாண்டில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நிகழ்வுகளை நடத்தியுள்ளது. அவற்றுள் 42 இணையவழி நிகழ்வுகள்,

ஏழு தொழில் நிறுவனச் சந்திப்புகள் ஆகியன அடங்கும். இவற்றின் வாயிலாக 4,000 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

4.5.5. இணைவு பெற்ற நிறுவனங்களும் இணைவு பெற்ற கல்லூரிகளும் இணைந்து இப்பல்கலைக்கழகத்தின் தொழில்முனைவோர் சுயவேலை மேம்பாட்டு நிறுவனத்தில் திறன் மேம்பாட்டுப் படிப்புகளை நடத்தியுள்ளன. இதில் 29,670 மாணவர்கள் சேர்ந்து பயன்பெற்றுள்ளனர்.

4.5.6. மிகச்சிறந்த தமிழ்க் கவிஞரான மகாகவி பாரதியாருக்கு மதிப்பளிக்கும் வகையில் 2021, டிசம்பர் 11 அன்று பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தின் போது பாரதியார் இருக்கை தொடங்கப்பட்டது.

## 4.6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.6.1. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற புனித அன்னை தெரசா அவர்களின் பெயரால் இயங்கும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பெண் கல்வியை மேம்படுத்தும் ஒரு சிறந்த கல்வி நிலையமாக விளங்குகிறது. 1984 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம், மாநிலத்திலேயே ஒரே ஒரு மகளிர் பல்கலைக்கழகம் என்ற பெருமையையும், இந்திய அளவில் மூன்றாவதாகவும் மகளிருக்காக மகளிரால் நிர்வகிக்கப்படுகிற பல்கலைக்கழகம் என்ற தனித்தன்மையுடன் செயல்பட்டு வருகிறது. பெண்களுக்காக கொடைக்கானலில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் பெண் ஆர்வலர்களுக்கு கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளுக்கு உகந்த சூழலை வழங்கி வருகிறது.

4.6.2 "சரி நிகர் சமானத்தை நோக்கி" என்பது இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் ஆகும். 'கல்வியின் மூலம் பெண்கள் மேம்பாடு' என்ற உயரிய

நோக்குடன் இணைந்து, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் இலக்குடன் செயல்பட்டு வருகிறது.

4.6.3. இப்பல்கலைக்கழகத்தில் 16 துறைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதுகலை மற்றும் ஆய்வு விரிவாக்க மையங்களும், திண்டுக்கல் மாவட்டம் பள்ளப்பட்டியில் உள்ள சிப்காட் வளாகத்தில் மகளிர் மேம்பாட்டு மையமும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் 13 இணைவு பெற்ற கல்லூரிகள் உள்ளன. அவற்றில், மூன்று அரசு கல்லூரிகள், இரண்டு அரசு உதவி பெறும் கல்லூரிகள், ஒரு உறுப்பு கல்லூரி மற்றும் ஏழு சுய நிதி கல்லூரிகள் அடங்கும்.

4.6.4. தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாம் சுழற்சியில் 'A' கிரேடு அங்கீகாரம் பெற்றுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் EDII–இன் கீழ் செயல்படும் மையமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேலும், நபார்டு நிதியுதவியுடன் கூடிய ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

4.6.5. பல்கலைக்கழகத்திலுள்ள துறைகளால் உயர்கல்வியின் தரத்தை உயர்த்தவும் தற்போதைய சூழலுக்கு ஏற்பவும் ஐந்து சர்வதேச, இரண்டு ஒன்றிய, ஆறு மாநில அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டது.

4.6.6. NSS /YRC/ Rotaract/ Swachh Pakhwada/ பெண்கள் ஆய்வு மையம் / காந்திய ஆய்வுகளுக்கான மையம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து சமூக அதிகாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான நலன் மற்றும் விழிப்புணர்வு திட்டங்களைத் தொடர பல பழங்குடியின கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன.

4.6.7. இப்பல்கலைக்கழகம் புதுமையான ஆராய்ச்சி மற்றும் தொடக்க அமைப்புகளுக்கான மையத்தை உருவாக்கியுள்ளது. மேலும், குழந்தைகளுக்கான நூலகம், புதுமை நூலகம் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.

4.6.8. SCOPUS /Web of Science / UGC/ Pub–Med ஆகியவற்றில் பல்கலைக்கழக ஆசிரியர்களால் 83 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய / சர்வதேச அளவில் கருத்தரங்கு/மாநாடு/இணைய வழி கருத்தரங்கில் 112 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

4.6.9. ஆராய்ச்சி முறை, அறிவுசார் சொத்துரிமைகள் (IPR), தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் 17 பயிற்சி பட்டறைகள்/கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டன.

## 4.7. அழகப்பா பல்கலைக்கழகம்

4.7.1. அழகப்பா பல்கலைக்கழகம் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 1985 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 4 புலங்கள், 44 துறைகள், 10 இயக்குநரகங்கள் மற்றும் மையங்கள், மூன்று பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேலும் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களை வரம்பெல்லையாக கொண்டுள்ளது. அனைத்து வழிமுறைகளிலும் தரமான கல்வியை வழங்குவதே இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

4.7.2. பல்கலைக்கழகத் துறைகள் வாயிலாக 203 பட்டப் படிப்புகளையும், இணைவுக் கல்லூரிகள் மூலம் 117 பட்டப் படிப்புகளையும் தொலைநிலைக் கல்வி வாயிலாக 75 பட்டப் படிப்புகளையும், இணைந்த கல்வி முறையின் கீழ் 146 பட்டப் படிப்புகளையும் வழங்கி வருகிறது. ஏறத்தாழ 1.20 இலட்சம்

மாணவர்கள் மேற்குறிப்பிட்ட கல்வி முறையின் வாயிலாக உயர்கல்வி பயின்று வருகிறார்கள்.

4.7.3. அழகப்பா பல்கலைக்கழகம், 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் 'A+' தகுதியைப் பெற்றுள்ளது. ஒன்றிய கல்வித் துறையால் வழங்கப்பட்ட தேசிய நிறுவன தரக் கட்டமைப்பின் (NIRF)–2021 தரப்பட்டியலில் 33 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

4.7.4. QS (Quacquarelli Symonds) உலகப் பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தும் நிறுவனத்தின் 2022 மதிப்பீட்டில், 107 இந்திய பல்கலைக்கழகங்கள் தரவரிசைப்படுத்தலில், அழகப்பா பல்கலைக்கழகம் 23 ஆவது இடத்தில் இருப்பதும், தமிழக பல்கலைக்கழகங்களில் முதலிடத்தில் இருப்பதும் சிறப்பானதாகும்.

4.7.5. ஒன்றிய அரசின், கல்வித்துறையின் கீழ், 2021–ஆம் ஆண்டு ARIIA (Atal Ranking of Institutions on Innovation Achievement) தர வரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் 'தொழில்நுட்பம் அல்லாத பொதுப்பிரிவின் கீழ் செயலாக்க' (Performer) அங்கீகாரம் பெற்றுள்ளது. மேலும், ஒன்றிய அரசின் கல்வித்துறையின் "புத்தாக்க மையம்" (Innovation Cell), 2020–21 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு புத்தாக்கம், கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி அளித்தல் ஆகிய செயல்பாடுகளின் அடிப்படையில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'தொழில் புத்தாக்கம் மற்றும் உருவாக்க மையத்திற்கு' (Innovation and Invention Cell) 5–க்கு 3.5 நட்சத்திர மதிப்புடன் அங்கீகாரம் அளித்துள்ளது.

4.7.6. அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரித் தகவலியல் துறையில் 'உயிரித் தகவலியல் மையத்தினை' தொடங்கி, அதன் மூலம், வரும் ஐந்து

ஆண்டுகளில் உயர் ஆய்வு மேற்கொள்வதற்காக ரூ.1.83 கோடி வழங்கியுள்ளது.

4.7.7. கென்யா, ஸ்ரீலங்கா, தென்ஆப்பிரிக்கா மற்றும் வங்காள தேசம் போன்ற வெளி நாடுகளிலிருந்து 10 மாணவர்கள், ஒன்றிய அரசின் கலாச்சார உறவு மேம்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன், (ICCR – Indian Council for Cultural Relations) அழகப்பா பல்கலைக்கழகத்தில் 2021–22 ஆம் கல்வியாண்டில் உயர்கல்வி பெறுவதற்காக சேர்ந்துள்ளனர். மேலும், வரும் கல்வி ஆண்டில் கூடுதல் எண்ணிக்கையிலான அயல்நாட்டு மாணவர்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

4.7.8. அழகப்பா பல்கலைக்கழகத்தில் ரூசா நிலை 2.0 திட்டத்தின் கீழ், சமூக அறிவியல் வளாகம், கல்வியியல் அறிவியல் வளாகம், பல்கலைக்கழக அறிவியல் ஆய்வு உபகரணங்கள் மைய வளாகம், தகவல் தொழில்நுட்ப வளாகம், மகளிர் விடுதி மற்றும்

உள்விளையாட்டு அரங்கம் ஆகிய ஐந்து புதிய கல்வி கட்டடங்கள் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பெற்று, முழுப் பயன்பாட்டில் உள்ளன. மேலும், ரூ.7.75 கோடி மதிப்பில் NMR மற்றும் DNA Sequencer ஆகிய இரண்டு உயர்தர ஆய்வு உபகரணங்கள் உயர் ஆய்வு மேற்கொள்வதற்காக வாங்கப்பட்டுள்ளன.

4.7.9. அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'தொழில் புத்தாக்கம் மற்றும் உருவாக்க மையம்' மூலம் புத்தாக்கம் மற்றும் மேம்பாட்டுக் கொள்கை (Innovation and Start–up Policy) வகுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் 'தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்" (EDII–TN), அழகப்பா பல்கலைக்கழகத்தின் திறன்மேம்பாட்டு மையத்தினை அங்கீகரித்து, அதன்மூலம் புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்துவதற்கு நிதி உதவி அளித்து வருகிறது. பல்கலைக்கழகத்தின் 44 உறுப்புக் கல்லூரிகள் 'One million Ideas' மற்றும் 'Tamil Nadu Students

Innovators' ஆகிய இரண்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுமதி அளித்து, இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.7.10. ஒன்றிய அரசின் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் அனுமதியுடன் அழகப்பா பல்கலைக்கழகத்தில் 90.8 MHz அலைவரிசையில் 'சமுதாய வானொலி' நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புற மாணவர்களுக்கு பல்கலைக்கழகத் தகவல்கள், பொது அறிவு மற்றும் சமுதாயத் தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

4.7.11. அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வுப் பிரிவு, 'மின்னணு மதிப்பீட்டுத் திட்டத்தினை' (Digital Evaluation System) செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த மின்னணு மதிப்பீட்டு முறை முதலில் பல்கலைக்கழக வளாக மாணவர்களுக்கும் இணைப்புக் கல்லூரிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

4.7.12. அழகப்பா பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை, சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டத்தில் அமைந்துள்ள இலந்தக்கரை பகுதியில் தொல்பொருள் ஆய்வு மேற்கொள்ள புதுடெல்லியிலுள்ள தொல்பொருள் கணக்காய்வுக் கழகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.7.13. அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'தொழில் உருவாக்கம் மற்றும் புத்தாக்க மையம்' புதியதாக தொழில் தொடங்குபவர்களுக்கு (Startups) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகள், தயாரிப்பு மேம்பாடு, மறு பொறியியல் மற்றும் அளவுத்திருத்தம் மற்றும் பரிசோதனை வசதிகள், தர நிர்ணயம் மற்றும் உறுதி மற்றும் சந்தை ஆய்வு போன்ற தொழில்நுட்ப சேவைகளை வழங்க திட்டமிட்டுள்ளது.

4.7.14. அழகப்பா பல்கலைக்கழகம், அனைத்துப் பல்கலைக்கழகங்களும் பயன்பெறும் வகையில் 'உலகத்தரத்திலான மாநில அளவிலான ஆராய்ச்சிக்

கூட்டமைப்பு' ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இக்கூட்டமைப்பு, நடப்பு வாழ்க்கைச் சூழலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் உடல் நலம், ஆற்றல், பேரிடர் மேலாண்மை, பல்லுயிர்ப் பெருக்கம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், திறன் மேம்பாடு மற்றும் சமுதாயப் பொருளாதார வளர்ச்சி ஆகிய பல்துறைகளில் நமது மாநிலத்தைக் கவனத்தில் கொண்டு துறையிடை அணுகுமுறையில் செயல்பட உள்ளது.

**4.8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**4.8.1.** 1990 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தமிழ்க்கவிஞர், இலக்கியவாதி, வரலாற்று ஆசிரியர் மற்றும் தத்துவ அறிஞரான பேராசிரியர் பெ.மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவாக பெயரிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு தமிழகத் தென் மாவட்டங்களை வரம்பெல்லையாகக் கொண்டு, 890 ஏக்கர் பரப்பிலான வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

**4.8.2.** தேசிய தர மதிப்பீடு குழுமத்தால் (NAAC) 3.13 தரப்புள்ளிகளுடன் 'A' நிலை மறு–அங்கீகாரம் பெற்றுள்ள இப்பல்கலைக்கழகம், தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2021 (NIRF) இன் தரவரிசையில் 70 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

**4.8.3.** இப்பல்கலைக்கழகம், நான்கு புலங்கள், 24 துறைகள், நான்கு சிறப்பு மையங்கள், ஒரு மத்திய

பல்துறை அறிவியல் ஆய்வு வசதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேலும், 100க்கும் மேற்பட்ட ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்புகள், ஆய்வியல் நிறைஞர் பட்டங்கள் மற்றும் முனைவர் ஆய்வுப் பட்டங்கள் (Int.PG/PG, M.Phil, Ph.D) உள்ளிட்ட உயர்கல்விப் பட்ட வகுப்புகளை வழங்குகின்றது. தற்போது பல்கலைக்கழகத் துறைகளில் 3,257 மாணவர்கள் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியைத் தொடர்கின்றனர்.

4.8.4. இப்பல்கலைக்கழகத்துடன் 105 கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. இணைவு பெற்ற கல்லூரிகளில் 1,07,573 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

4.8.5. இப்பல்கலைக்கழகம், 2021–22 இல், 12 காப்புரிமைகள் பெற்று, தேசிய அளவிலான கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஸ்கோபஸ்

பட்டியலிடப்பட்ட, தரமதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்விதழ்களில் வெளியிட்ட 6,651 ஆய்வுக்கட்டுரை வெளியீடுகள், 76,564 க்கும் மேற்பட்ட பல்வேறு ஆய்வர்களால் ஈர்க்கப்பட்டு மேற்கோள்களுடன் பட்டியலிடப்பட்ட பெருமைகளைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகம் இதுவரை ஈட்டியுள்ள h–index 93 மற்றும் i–10 index 1,706 ஆகும்.

4.8.6. பல்கலைக்கழக நூலகம் முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்டு, இணைப்புக் கல்லூரிகள் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் உதவியுடன் 671 அரிய நூல்கள் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளது.

4.8.7. புது தில்லி தேசிய திறன் தகுதிக் கட்டமைப்பின் (NSQF) கீழ், பல்கலைக்கழக நிதிநல்கை குழு (UGC), திறன் மேம்பாட்டிற்காக ரூ.1.60 கோடி வழங்கியுள்ளது.

4.8.8. இப்பல்கலைக்கழகத்தில், 'வ.உ. சிதம்பரனார் ஆராய்ச்சி இருக்கை' ஒன்று

பல்கலைக்கழக நிதியில் வழங்கிய ரூ.20.00 இலட்சம் தொகுப்புநிதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

4.8.9. பல்கலைக்கழகத்தில் "தமிழ் பாரம்பரிய அறிவு அமைப்பு ஆய்வு மையம்", தொல்லியல், பண்பாட்டு நடவடிக்கைகள், உயிரியல் பன்முகத்தன்மை, இயற்கை கட்டமைப்புகள், பாரம்பரிய மருந்துகள், விவசாய நடைமுறைகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் போன்றவற்றின் விரிவான அறிவுத் தளம் மற்றும் மின்னணு ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென முதற்கட்டமாக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.8.10. இப்பல்கலைக்கழகத்தில் 'தொல்லியல் ஆய்வு மையம்' ஒன்று, பல்கலைக்கழக நிதியிலிருந்து ஆண்டுக்கு ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் 2021-22 ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் உயரிய நோக்கம், பண்டைய நினைவுச்சின்னங்களை அடையாளம் காண்பதும் மற்றும் இன்றுவரை இந்த

தளங்களிலிருந்து மீட்கப்பட்ட கலைப்பொருட்களை, ஊடுருவல் அல்லாத அறிவியல் நுட்பங்கள் மூலம், பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் திறனறிவு பங்களிப்புடன் முறையாகக் கண்டறிதலும் ஆகும்.

4.8.11. புதிய "நகர வளாக கட்டடம்" ஒன்று, சீவலப்பேரி கீழநத்தம் கிராமத்திலுள்ள பல்கலைக்கழக இடத்தில், திறன் மேம்பாடு / தொழில்முனைவோர் மேம்பாடு பயிற்சிகளுக்காக கட்டப்பட்டு வருகிறது.

4.8.12. ரூ.34.00 இலட்சம் செலவில் "கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்", ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது நாளொன்றுக்கு உருவாக்கும் ஒரு இலட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், பல்கலைக்கழகத் தோட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

4.8.13. இந்தப் பல்கலைக்கழகம், ஒன்றிய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரகக் கல்வி குழும விருதினை பெற்றது.

4.8.14. நாட்டு நலப்பணித்திட்டத்தின் கீழ் இப்பல்கலைக்கழக துறைகள் மற்றும் பல்கலைக்கழக

இணைவு பெற்ற கல்லூரிகள் மூலம் 233 கிராமங்களை தத்தெடுத்துள்ளது.

4.8.15. ஃபிட் இந்தியா இயக்கத்தின் (ஃபிட் இந்தியா ஓட்டம், சர்வதேச யோகா தினம் மற்றும் தேசிய விளையாட்டு தினம்) கீழ் சுகாதாரம் தொடர்பான பிரச்சாரத்தில் பங்கேற்று மாணவர்கள் உடல் நலன் மேம்பாட்டினை உணர்த்தினர்.

## 4.9. பெரியார் பல்கலைக்கழகம்

4.9.1. பெரியார் பல்கலைக்கழகம் 1997–ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் சேலத்தில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது.

4.9.2. இப்பல்கலைக்கழகத்தில் தற்போது 27 துறைகளை உள்ளடக்கிய ஐந்து அறிவியல் புலங்கள் மற்றும் மூன்று கலைப்புலங்களும் உள்ளன. அவற்றில் 32 முதுநிலை படிப்புகள், மூன்று இளநிலை தொழிற்படிப்புகள் மற்றும் 27 ஆராய்ச்சி படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. பெரியார் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையம் தருமபுரியில் அமைந்துள்ளது.

4.9.3. இப்பல்கலைக்கழகத்தின் இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ள "அறிவால் விளையும் உலகு" என்ற பொதுவான உண்மையை உணர்த்தும் வண்ணம் அதனை முழுமையாக செயலாக்க பல்வேறு துறைகளில் அறிவை மேம்படுத்தும் குறிக்கோளுடன்

பல்கலைக்கழகமும், அதன் துறைகளும் செயல்படுகின்றன.

4.9.4. மிகை நிகர் / மெய்நிகர் (AR/VR) துணி நூல் மற்றும் ஆடை வடிவமைப்பு, உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து, மின்னணு வணிகம் மற்றும் பட்டயப்படிப்பான கணக்கியல் மற்றும் வரிவிதிப்பியல் ஆகிய திறன் சார்ந்த படிப்புகள் இப்பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாஸ்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து முதுநிலை தரவு அறிவியல் (M.Sc. Data Science) படிப்பை இப்பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

4.9.5. கோவிட்–19 பெருந்தொற்று பாதிப்பால் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும், HIV தொற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் 2021–22 ஆம் கல்வியாண்டு முதல் 100% கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4.9.6. தேசிய தர நிர்ணயக் குழுவால் (NAAC) இப்பல்கலைக்கழகத்திற்கு 2021–ஆம் ஆண்டில் மிகச்

சிறப்பு வாய்ந்த 'A++' தர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) தரவரிசையில் 2021–ஆம் ஆண்டில் இந்திய பல்கலைக்கழகங்களில் 73–ஆம் இடமும், ARIIA 2021 தரவரிசையில் 10–ஆவது இடமும் இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

4.9.7. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வியல் திட்டத்தின் (TNSRCM) கீழ் 350 ஊரக இளைஞர்களுக்கு பணியமர்த்தலுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டத்தினை வழங்கும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறைக்கு ரூ.266 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது செயற்கை நுண்ணறிவு, வர்த்தக நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் UI/UX போன்ற புத்துலகத் திறன்களை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ள தொழிற்சாலை – 4.0 (INDUSTRY 4.0)–இன் முன்னெடுப்பாகும்.

4.9.8. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் (EDII–TN) அளிக்கப்பட்ட ரூபாய் ஒரு கோடியில் பெரியார் பல்கலைக்கழக வணிக அடைகாப்புக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4.9.9. இப்பல்கலைக்கழகத்தில் RUSA திட்டத்தின் கீழ் Single Crystal XRD, SEM, Solar Simulator, GCMS போன்ற நவீன உபகரணங்களை கொண்ட மைய உபகரண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4.9.10. தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களான பிரான்சில் சவுத் பிரிட்னி பல்கலைக்கழகத்துடன் ஆசிரியர் பரிமாற்றம், மலேசிய கர்ட்டின் பல்கலைக்கழகத்துடன் மாணவர்களின் உள்ளுறை பயிற்சி திட்டங்கள், டெக்னாலஜி பெட்ரோனஸ் பல்கலைக்கழகத்துடன் உள்ளுறை பயிற்சி மற்றும் ஆசிரியர் பரிமாற்றம் ஆகிய பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இப்பல்கலைக்கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.9.11. பல்கலைக்கழக மானியக்குழுவின் ஒப்புதலுடன் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பாடங்களுடன் ஒருங்கிணைந்த B.Voc. பட்டப்படிப்பு இப்பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 4.10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.10.1. மாநிலத்தில் உயர் கல்வியை நாடுவோருக்கு திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கற்றல் முறையை அறிமுகப்படுத்துவதற்காகவும், மேலும் அதனை மேம்படுத்துவதற்கும், அறிவுத்திறனை மேம்படுத்துதல் புத்தாக்கச் சூழலில் பயிற்சி மற்றும் திறன், மனிதவளச் செயற்பாட்டுத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை தொடர்ந்து வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தவும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

4.10.2. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதிலிருந்தே, இதுவரை கல்வி சென்றடையாத பின் தங்கிய பிரிவினர், தொலைதூர மற்றும் கிராமப்புற பகுதியிலுள்ள உழைக்கும் மக்கள், இல்லத்தரசிகள், மாற்றுத்திறனாளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும்

பழங்குடியின மக்களுக்கு செலவு குறைந்த, சமூகம் சம்மந்தப்பட்ட திறந்தநிலை மற்றும் தொலைதூர கற்றல் திட்டத்தின் மூலம் கல்வி சேவை வழங்கி வருகிறது.

4.10.3. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் பட்டப்படிப்புகள், திறன்மேம்பாட்டு படிப்புகள், சான்றிதழ் படிப்புகளில் தொடங்கி பட்டயப்படிப்புகள், தொழிற்கல்வி பட்டய படிப்புகள், முதுகலை பட்டய படிப்புகள், முதுகலை பட்டப் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளான ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டப்படிப்பு ஆகிய படிப்புகளையும் வழங்கிவருகிறது.

4.10.4. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 2021–22 ஆம் ஆண்டில் ஒரு நூலகத்திற்கு இரண்டு வீதம் 64 புத்தக அலமாரிகளை 32 மாவட்ட நூலகங்களுக்கு தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் மூலம் வழங்கியுள்ளதுடன், 750 தானே கற்றல் பாட நூல்களையும் மத்திய அரசு பணியாளர்கள்

தேர்வாணையம், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகியவை நடத்தும் தேர்வுகளை எழுதும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் அனுப்பியுள்ளது.

4.10.5. மயிலாடுதுறை, சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் நான்கு புதிய மண்டல மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

4.10.6. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 2021–22 ஆம் ஆண்டில் சமூக ஊடகக்கொள்கை 2021, மாற்றுத்திறனாளிகளுக்கான சம வாய்ப்பு கொள்கை ஆகிய கொள்கை ஆவணங்கள் மற்றும் நெறிமுறைகளை முதன்முறையாக வடிவமைத்து வெளியிட்டுள்ளது.

4.10.7. தற்போதைய கோவிட் தொற்று நோய் காலத்தில் சேர்க்கை முகாமினை தீவிரமாக மேற்கொண்டு மொத்தம் 17,273 மாணவர்களை

பல்வேறு படிப்புகளில் 2021–22 கல்வியாண்டில் சேர்த்துள்ளது.

4.10.8. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் திறந்த நிலை மற்றும் தொலை நிலை கற்றலில் தானே கற்றல் முறை பாடநூல் கொள்கை ஆவணத்தை உருவாக்கியுள்ளது. இதுவரை புதுப்பிக்கப்பட்ட பாடத் திட்டத்தின் அடிப்படையில் 316 தானே கற்றல் முறை பாடநூல்களை உருவாக்கியுள்ளது.

4.10.9. காந்தி கிராமம் ஊரக நிறுவனத்துடன் (நிகர்நிலை பல்கலைக்கழக) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி தொடர்பை மேம்படுத்தும் பொருட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை 05.01.2022 அன்று மேற்கொண்டுள்ளது.

4.10.10. 2021 ஆம் ஆண்டில் பதினெட்டு கல்வி நிறுவனங்கள் / அமைப்புகளுடன் படிப்புகளை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

4.10.11. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொற்பனைகோட்டையில் பல்கலைக்கழகம் அதன் ஆசிரியர்கள் மூலம் அகழ்வாராய்ச்சி பணியில் ஈடுபட்டுள்ளது.

4.10.12. இப்பல்கலைக்கழகம் 15.01.2022 அன்று திருவள்ளுவர் இருக்கையை நிறுவியுள்ளது.

## 4.11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

4.11.1. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் வளாகத்தில் 10 துறைகளை கொண்டுள்ளது. திருவள்ளுவர் பல்கலைக்கழக வரம்பெல்லைக்குட்பட்ட வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 73 இணைவு பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஆறு ஆராய்ச்சி நிறுவனங்களையும் பெற்றுள்ளது.

4.11.2. பல்கலைக்கழக துறைகளின் ஆராய்ச்சிகளில் 694 ஆய்வுக் கட்டுரைகள் அறிவியல் மேற்கோள் கொண்ட அறிவியல் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், ஆசிரியர்களின் 923 ஆய்வுக் கட்டுரைகளும் ஸ்கோபஸ் அட்டவணையிடப்பட்ட இதழ்களில் (Scopus Indexed) வெளியிடப்பட்டுள்ளன. கட்டுரைக்கான அதிக சராசரி மேற்கோள் குறியீட்டைக் கொண்ட

பல்கலைக்கழகங்களின் பட்டியலில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் (18.72) முதல் இடத்தில் உள்ளது.

**4.11.3.** "சிக்கலான வலையமைப்பு பற்றிய ஆய்வுகள்" என்ற திட்டத்திற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, FIST திட்டத்தின் மூலம் ரூ.52.00 இலட்சம் வழங்கியுள்ளது.

**4.11.4.** மார்பகப் புற்றுநோய் சிகிச்சை தொடர்பான ஆய்வு திட்டத்திற்கு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் ரூ.14.15 இலட்சம் வழங்கியுள்ளது.

**4.11.5.** "Studies on Stochastic Complex Valued Systems" என்ற திட்டத்திற்கு ரூ.13.20 இலட்சமும், "பல்நோக்கு முகவர் அமைப்புகளின் ஆய்வுகள்" என்ற திட்டத்திற்கு ரூ.6.00 இலட்சமும் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (SERB) வழங்கியுள்ளது.

**4.11.6.** 1,039 முனைவர் பட்ட ஆய்வறிக்கைகள் மற்றும் 5,883 ஆய்வியல் நிறைஞர்கள் சமர்ப்பித்த

கட்டுரைகள் மட்டுமல்லாமல், அனைத்து துறைகள் சார்ந்த 11,677 நூல்கள் பல்கலைக்கழக மைய நூலகத்தில் உள்ளன. நூலகத்தில் மின்வளங்களை பார்வையிடுவதற்காக இணையதள வசதிகள் உள்ளன.

**4.11.7. திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில் புதிய கட்டடங்களான துணைவேந்தர் குடியிருப்பு, மாணவர் விடுதி, மாணவியர் விடுதி மற்றும் வகுப்பறைகளுக்கான கட்டடங்கள் ஆகியவை முடியும் நிலையில் உள்ளன.**

## 4.12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

4.12.1. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது, ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட நமது தேசத்தின் ஒரே பல்கலைக்கழகம் ஆகும்.

4.12.2. தொழில்நுட்ப நிலைக்கேற்ப மாணவர்களுக்கு கற்பிப்பது மற்றும் பயிற்றுவிப்பது குறித்த திறன்களை வளர்ப்பது ஆசிரியர் கல்வியின் பொறுப்பு ஆகும். தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் கல்வியினை மேம்படுத்துவதற்கு மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கல்வி ரீதியாக கண்காணிப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

4.12.3. இப்பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு 01.07.2008 முதல் செயல்பட தொடங்கிய போது, இதர பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றிருந்த தமிழகத்திலுள்ள 491 கல்வியியல் கல்லூரிகள், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைப்புக்குள் கொண்டு வரப்பட்டது. தற்போது ஏழு

அரசு, 14 அரசு உதவிபெறும் மற்றும் 628 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் உட்பட மொத்தம் 649 கல்வியியல் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன.

4.12.4. அனைத்து வகையிலும் வளர்ச்சி, இலக்குகளை நிர்ணயிக்கவும், கல்வி மற்றும் நிர்வாக பணிகளுக்கான செயல்திட்டத்தில் புதிய உத்திகளைப் புகுத்தவும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் பல்வேறு மையங்களை தொடங்கி செயல்படுத்தி வருகிறது.

4.12.5. 2021–22 ஆம் ஆண்டில் உலகளவில் பிரசித்திபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளான "மிகநீண்ட இணையவழி தமிழ் பட்டிமன்றம் (27 மணி நேரம்) என்ற நிகழ்வில் பங்கேற்பு. "உச்சபட்ச சாதனைகளை படைக்க ஆசிரியர்களின் பங்களிப்பு "என்ற தலைப்பில் மிகநீண்ட இணையவழி கருத்தரங்கத்தினை (30 மணி நேரம் 30 நிமிடங்கள்) ஏற்பாடு செய்தது, மேலும் தொலைநோக்கு பார்வை 2030 என்ற நோக்கத்தில், "உயர்தரத்தை அடைய வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவதின் அவசியம்" என்ற தலைப்பில்

மிகநீண்ட இணையவழி நிகழ்ச்சியை (59 மணி நேரம்) நடத்தியது போன்ற பல்வேறு செயல்பாடுகளால் உலகளாவிய அங்கீகாரத்தினையும் பாராட்டு சான்றிதழ்களையும் இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

4.12.6. உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் (கல்வி அமைச்சகம் – ஒன்றிய அரசு) கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விஷ்ணுவாக்கம், இலுப்பூர், பனப்பாக்கம், அயத்தூர் மற்றும் கோவிந்தமேடு ஆகிய ஐந்து கிராமங்களை இப்பல்கலைக்கழகம் தத்தெடுத்துக் கொண்டுள்ளது.

4.12.7. இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற ஒவ்வொரு கல்வியியல் கல்லூரியும் அருகிலுள்ள ஓர் அரசு பள்ளியினை தத்தெடுத்து ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்த உத்தேசித்துள்ளது.

## 4.13. அண்ணாமலை பல்கலைக்கழகம்

4.13.1. அண்ணாமலை பல்கலைக்கழகம், முதலில் அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டம் 1928 (1929 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 1) இன் படி நிறுவப்பட்டது, அண்ணாமலை பல்கலைக்கழக சட்டம், 2013–இன் கீழ் அப்பல்கலைக்கழகம் 25.09.2013 அன்று முதல் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

4.13.2. அண்ணாமலை பல்கலைக்கழகம், கல்வியை எட்ட இயலாத மக்களும் எளிதில் பயில அளப்பரிய சேவை செய்து வருகிறது. இப்பல்கலைக்கழகம் பல ஆண்டுகளாக பல புதுமையான கற்பித்தல் திட்டங்களைத் தொடங்கியுள்ளதுடன், தொலைதூரக் கல்வியில் முன்னோடியாக இருந்து வருகிறது.

4.13.3. இப்பல்கலைக்கழகத்தில் எட்டு புலங்கள் மற்றும் 52 துறைகள் மூலம் பொறியியல், அடிப்படை மற்றும் பயன்பாட்டு அறிவியல் மேலாண்மை மற்றும் கலை படிப்புகள், சமூக அறிவியல், வேளாண்மை, கடல் அறிவியல், இந்திய

மொழிகள், கல்வி மற்றும் கவின் கலைகள் ஆகிய பல்வேறு துறைகளில் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டப்படிப்புகள் மற்றும் முனைவர் பட்டத்திற்கு பிந்தைய படிப்புகளை வழங்குகிறது. இப்பல்கலைக்கழகம் இணைவு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களை வரம்பெல்லையாகக் கொண்டுள்ளது. 74 இணைப்புக் கல்லூரிகள் மற்றும் ஒரு முதுகலை விரிவாக்க மையம் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

4.13.4. மாணவர்கள் மேம்படுத்தப்பட்ட அனுபவத்தினை பெறுவதற்காக பாடத்திட்டம், கற்பித்தல், மதிப்பீடு மற்றும் மாணவர் ஆதரவு ஆகியவற்றை மறுசீரமைப்பதற்கு இப்பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் இப்பல்கலைக்கழகம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் ஆசிரிய தன்னாட்சிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

4.13.5. கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு தகவல் தொடர்பு, கருத்து பரிமாற்றம்,

விவாதம், ஆராய்ச்சி மற்றும் பல்துறை சிந்தனை கற்பித்தல் முறைகளில் கவனம் செலுத்தப்படுகிறது.

4.13.6. இப்பல்கலைக்கழகத்தில் முழுமையான கல்வியின் ஒரு பகுதியாக, நடைமுறைத் திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக வேலைவாய்ப்பு திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

4.13.7. இப்பல்கலைக்கழகம் மாணவர் சேர்க்கை, நிர்வாகம், நிதிசார் கணக்குகள், தேர்வுகள் மற்றும் மாணவர் உதவி ஆகியவற்றின் திறமையான மேலாண்மைக்காக மின் ஆளுமையை படிப்படியாக செயல்படுத்தி வருகிறது.

4.13.8. இப்பல்கலைக்கழகம் வழங்கும் அனைத்து மாணவர் சேர்க்கையும் இணையவழி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.13.9. டிஜிட்டல் வருகைப்பதிவு முறையைத் தழுவி வருகையை திறம்பட நிர்வகிப்பதற்கான பயோமெட்ரிக் வருகை மேலாண்மை முறையை பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

4.13.10. உயர் ஒளிபரப்பு திறன் கொண்ட கண்ணாடி இழை கேபிள் மூலமும் LAN மூலமும்

வளாகம் முழுவதும் இணைய வசதி வழங்கப்படுகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இன்ட்ராநெட் மற்றும் வைஃபை மூலம் ஆன்லைன் ஆதாரங்களை அணுகலாம். நாள்தோறும் 2500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இன்ட்ராநெட் மற்றும் வைஃபை மூலம் இணையவழி வசதிகளைப் பெறுகின்றனர்.

## 5. தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

5.1. ஒரு மாநிலத்தின் நிர்வாக வரலாற்றில் தமிழ்நாடு ஆவண காப்பகம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆவணங்கள் அதிக மதிப்பும், பொக்கிஷமும் கொண்டவை என்பதால், நமது தமிழ் மன்னர்கள் இந்த ஆவணங்களை 'ஆவண களரி' என்ற பெயரில் பாதுகாத்து வந்தார்கள், பொறுப்பாளர் 'ஓலைநாயகம்' என்று அழைக்கப்பட்டனர். தற்போது இம்மரபு தொடர்ந்து வருவதுடன், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் முறையான தோற்றம் 1805 ஆம் ஆண்டில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உருவாக்கப்பட்ட மத்திய ஆவணக் காப்பறையைக் கொள்ளலாம். ஆவணங்கள் எண்ணிக்கையில் பெருகியதால், அவை 1909 ஆம் ஆண்டில் நன்கு வடிவமைக்கப்பட்ட தற்போதைய வளாகத்திற்கு மாற்றப்பட்டு, "மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்" என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. பின்னர் 1973 இல்

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

5.2. ஆவண காப்பகம் 1670 ஆம் ஆண்டு முதலான ஆவணங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும், இந்த ஆவணங்கள் வெறும் தகவலுக்காக மட்டுமல்ல, அறிவின் கலைக்களஞ்சியமாகவும் உள்ளன. மேலும், டச்சு, டேனிஷ் மற்றும் பாரசீக மொழிகளில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களின் ஆவணங்களும் இக்காப்பகத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தின் வரலாற்றை பல்வேறு பரிமாணங்களில் ஆய்வு செய்ய ஆவணக் காப்பகங்கள் உதவுகின்றன என்பதில் சந்தேகமில்லை.

5.3. இத்துறையின் முக்கிய செயல்பாடுகளானது, நிரந்தர ஆவணங்களை ஒன்றுபடுத்தியும், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, அறிவியல் முறையில் ஆவணங்களை பாதுகாப்பதாகும். பல்வேறு அரசு துறைகளுக்கும்,

நம்பத்தகுந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் அலுவலக குறிப்புகளை எடுக்க இவ்வாவணக்காப்பகம் மிகவும் உதவியாக இருக்கிறது. அரசாங்க ஆணைகள் அரசிதழ்களின் நகல்கள், வாக்காளர் பட்டியல்களின் நகல்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை தனிப்பட்ட நபர்களின் கோரிக்கையின் பேரில் பெறுவதற்கும் இந்த காப்பகங்கள் உதவியாக இருக்கின்றது.

5.4. அடுத்த தலைமுறைக்கான ஆவணங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து பதிவுகளும் பாரம்பரியம் மற்றும் அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி நுண்படமாக்குதல் (மைக்ரோ ஃபிலிம்) மற்றும் கணினி மூலம் அட்டவணைப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

5.5. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் உள்ள நூலகத்தில் 1633 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட 2.31 இலட்சம் புத்தகங்களின் தொகுப்பு உள்ளது. இந்த புத்தகங்கள்

ஆராய்ச்சியாளர்களின் குறிப்பெடுக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன.

5.6. 1981 ஆம் ஆண்டில் "ஆவண மேலாண்மை மற்றும் பாதுகாத்தல்" குறித்த சிறப்புப் பயிற்சி தொடங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற பயிற்சியில் தமிழக அரசு அலுவலகங்களில் ஆவண அறைகளின் பொறுப்பில் இருந்த 63 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

5.7. பல்வேறு அரசுத் துறை ஆவணங்களின் முக்கியத்துவம், மாநிலம் முழுவதும் நிர்வாகம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கோயம்புத்தூர், கடலூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஆவணக்காப்பகங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

5.8. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 இன் கீழ் இக்காப்பகத்திலுள்ள மூல

ஆவணங்களிலிருந்து நகல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டில், 9,000 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தேவையான தகவல்களை பெற்று பயனடைந்துள்ளனர்.

## 6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

6.1. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992–இல் தமிழக அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்கு உரிய வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பு மூலம் கல்வித் திட்டங்களை இம்மன்றம் செயல்படுத்தி வருகிறது.

### 6.2. மன்றத்தின் செயல்பாடுகள்

6.2.1. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 24 அரசு கல்லூரிகளில் "மெதுவாக கற்கும் கல்லூரி மாணாக்கர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு சிறப்பு கவனம்" அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ.30.00 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

6.2.2. 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் "மென்திறன் பயிற்சி மையங்கள்" உருவாக்கப்பட்டுள்ளன. இந்த "மென்திறன் பயிற்சி

மையங்கள்" வாயிலாக ஒரு கல்லூரிக்கு 500 மாணாக்கர்கள் வீதம் பயிற்சி அளிக்க ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.55 கோடி தொகை செலவிடப்பட்டு வருகிறது.

6.2.3. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களிடையே ஆராய்ச்சித் திறனை ஊக்குவிக்கும் வகையில், 'சிறு ஆராய்ச்சி ஆய்வு' திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 25 ஆய்வுத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிரியர் ஒருவருக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 117 திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6.2.4. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களில் "சிறு ஆய்வு திட்டத்தின்" கீழ் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணாக்கருக்கும் அவர்களின் ஆராய்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆராய்ச்சி திட்டத்திற்கும்

ரூ.15,000/– வழங்கப்படுகிறது. இதுவரை 230 ஆய்வுத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6.2.5 தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆய்வரங்கம் / பட்டறைகள் / தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கு நடத்துவது தொடர்பாக 194 கருத்துருக்களுக்கு பகுதி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6.2.6 இம்மன்றம் பல்வேறு பட்டப்படிப்புகளுக்கு இடையே இணைத்தன்மை முடிவை வழங்குவதற்கு பல்வேறு பாடத்திட்டக் குழுக் கூட்டங்களை நடத்தி வருகிறது.

6.2.7. "மானுடவியல், சமூக அறிவியல்" மற்றும் "நவீன அறிவியல்" ஆகிய தலைப்புகளில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்வு கட்டுரைகளை வருடத்திற்கு இரண்டு முறை வெளியிடுவதன் மூலம் மாணாக்கர்களும், ஆராய்ச்சியாளர்களும் தற்போதைய

ஆராய்ச்சிகளை பற்றி அறிந்து கொள்ளவும், தங்களது புலமை மற்றும் சிறப்பறிவுத் திறனை இக்கட்டுரைகள் மூலமாக வெளிப்படுத்தவும் உதவுகிறது.

6.2.8. தொழில் நிறுவனங்களின் பங்கேற்பை வளர்ப்பதற்கும், வேலை வாய்ப்பினை உயர்த்துவதற்கும், ஆறு பல்கலைக்கழகங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ள "பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையங்களின்" இணைப்பு மையமாக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் செயல்படுகிறது.

## 6.3. 2022-23 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

6.3.1. மாணாக்கர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்க தொழில்துறை பங்கேற்பாளர்களுடன் கலந்தாலோசித்து மாநிலப் பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகளில் வழங்கப்படும் படிப்புகளை மறுசீரமைத்தல்.

6.3.2. அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் 28.4.2017 நாளிட்ட அறிவிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட பட்டப் படிப்புகளை விரிவாக தொகுத்து வழங்குவதன் மூலம் பாடங்களுக்கான இணைத்தன்மை செயல்முறையினை எளிதாக்கி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கும், உயர் கல்வியினை தொடரவும் வழிவகை செய்தல்.

6.3.3. நாட்டின் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டு தமிழ்நாட்டின் சுதந்திர போராட்ட வரலாற்றின் 75 முக்கிய கட்டங்களை ஒருங்கிணைக்கும் சிறப்பு ஆவணத்தைத் தயாரித்தல்.

6.3.4. உயர்கல்வியின் வளர்ச்சியில் 75 முக்கிய கட்டங்களைக் குறிக்கும் சிறப்பு ஆவணத்தைத் தயாரித்தல் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பங்களிப்புகளின் அடிப்படையில் 75 மிக முக்கியமான உயர்கல்வி நிறுவனங்களின் அட்டவணைப்

பட்டியலைத் தயாரிக்க ஆதாரங்கள், தரவுகளைச் சேகரித்தல்.

6.3.5. இம்மன்றம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து தேர்வு சீர்திருத்த பட்டறைகளை அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு நடத்த திட்டமிட்டுள்ளது.

6.3.6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பினை போல மாநில அளவிலான தரநிர்ணய விதிமுறையினை வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முக்கிய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உள்தர நிர்ணய பிரிவு மற்றும் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பு / தேசிய தரமதிப்பீட்டுக்குழு (IQAC மற்றும் NIRF / NAAC) மைய அதிகாரிகளுடன் ஒன்பது ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

6.3.7. சீர்மைப் பயிற்சியினை (Bridge Course) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாமாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு மீண்டும் செயல்படுத்துதல்.

6.3.8. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மின் ஆளுகை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்தி உயர்கல்வியின் தரத்தை சர்வதேச அளவிற்கு மேம்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயின்று உலகின் பல்வேறு இடங்களில் வசிக்கும் முன்னாள் மாணாக்கர்களை ஒருங்கிணைக்க புதிய திட்டம் ஒன்று 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 7. தேசிய உயர்கல்வி திட்டம் (ரூசா)

7.1. தேசிய உயர்கல்வி திட்டம் (ரூசா) என்பது 40% மாநில அரசின் பங்குடன் மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஒன்றிய நிதியுதவித் திட்டமாகும், உயர்கல்வியில் தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய அதிகமான செயல்திறன், சமத்துவம் மற்றும் சிறப்பினை அடைய திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டில் 172 நிறுவனங்கள் நேரடியாகவும் மற்றும் பல உயர்கல்வி நிறுவனங்களுக்கும் (HEIs) பல்வேறு கூறுகளின் கீழ் நிதியளிக்கப்பட்டு உயர்கல்வித் துறையில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ள காரணத்தால், ரூசா 3.0 திட்டம் விரைவில் அமலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**7.1.1. ரூசா 1.0**

மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புயுடையேயான வகுப்பறைகள், ஆய்வகங்கள், விளையாட்டு வசதிகள், திறன் வகுப்பறைகள் மற்றும் தொழில் நுட்பம் நிறைந்த

கற்றல் ஆகியவை ரூசா 1.0 திட்டம் சிறப்பாக அமல்படுத்தப்பட்டதற்கு சான்றாகத் திகழ்கிறது.

### 7.2. ரூசா 2.0

ரூசா 1.0 வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, திட்டத்தின் திருப்திகரமான விளைவுகள் காரணமாக, ரூசா திட்டம் 2.0, ஒன்றிய கல்வி அமைச்சகம் (Ministry of Education) மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூ.615.78 கோடி அனுமதிக்கப்பட்டது. உள்கட்டமைப்பு கூறுகளின் கீழ், முதல் கட்டத்தில் நிதி பெறாத நிறுவனங்கள் விதிமுறைகளுக்கு இணங்க ரூசா 2.0 திட்டத்தின் கீழ் நிதி பெறுவதற்கு தகுதி உடைய நிறுவனங்களாக கருதப்பட்டு நிதியுதவி அளிக்கப்பட்டது. தேசிய தர நிர்ணயக் குழுவின் அங்கீகாரம், ரூசா 2.0–இன் கீழ் நிதியளிப்பதற்கான கட்டாய தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூசா 2.0–இன் கீழ் மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளில் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துவதற்கான இரண்டு புதிய கூறுகளை

அறிமுகப்படுத்தியுள்ளதன் மூலம் மொத்தம் 14 கூறுகள் ரூசா 2.0–இன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழகத்திற்கு ரூ.492.00 கோடி (ஒன்றிய அரசின் பங்கு ரூ.295.00 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.197.00 கோடி) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**7.2.1. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பல்கலைக்கழகங்களில் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துதல்.**

இந்த அங்கத்தின் கீழ் ரூ.100.00 கோடி அங்கீகரிக்கப்பட்டு இதில், ஒரு தொழில் முனைவோர் மையத்தை உருவாக்க ரூ.15.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.85.00 கோடி, ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, தரமேம்பாடு மற்றும் சிறப்பான செயல்பாடு ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மிச்சிகன் பல்கலைக்கழகம், சிகாகோ பல்கலைக்கழகம் மற்றும் கார்னெல் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து ஆய்வு அடிப்படையிலான ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்கிறது. மேம்பட்ட ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் கார்னெல்

பல்கலைக்கழகத்துடன் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் சுமார் 7,700 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

7.2.2. மூன்று பல்கலைக்கழகங்கள் மற்றும் 10 கல்லூரிகளுக்கு, உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கென ரூ.80.00 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதன் மூலம், உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கான பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7.2.3. சமத்துவ செயல்பாடுகள் அடிப்படையில் திருநெல்வேலி மற்றும் மதுரையில் உள்ள இரண்டு கல்லூரிகளுக்கு தலா ரூ.2.50 கோடி வீதம் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

7.2.4. மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு ஆசிரியர் மேம்பாட்டிற்காக மனிதவள மேம்பாட்டு மையங்களை (HRDC) அமைக்க தலா ரூ.3.5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 7.3. ரூசா–வின் செயல்பாடுகள்

7.3.1. ஆராய்ச்சி திட்டத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 4 தொழில்நுட்ப தொடர் வகுப்புகளுடன் கூடிய தேசிய மாநாடு 2019–இல் நடத்தப்பட்டது. இதில் 20 தலைசிறந்த பேச்சாளர்களும், 300 பங்கேற்பாளர்களும் கலந்து கொண்டனர்.

7.3.2. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் 19 அரசு கலை மற்றும் அறிவியல் (தன்னாட்சி) கல்லூரிகளில் 13,159 மாணாக்கர்களுக்கு தொழிற்பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் மாநிலத்தில் உள்ள 48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.3.32 கோடியில்

தொழிற்கல்வித் திட்டங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.3.3. அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி மூலம் தொழிற்கல்வி கூறுகளின் கீழ் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தலைமைத்துவம், தனிப்பட்ட திறன்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பம் போன்றவற்றில் சுமார் 2,800 மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

7.3.4. வாராந்திர இயங்கலை பயிலரங்கம் (WoW), மூலம் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த கருப்பொருள்களை உள்ளடக்கிய நவீன புதுப்பிப்புகளுடன் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு உயர்கல்வி நிறுவனங்களுக்கும், ஒரு நிகழ்நிலை தொடர் வகுப்பு நடத்தப்படுகிறது. ஏறக்குறைய 500 மாணவர்கள் நேரலை (LIVE), திட்டத்தில் பங்கேற்கின்றனர், மேலும், மாணவர்கள் பயன்பெறும்

வகையில் வகுப்புகள் "TNRUSA Youtube" என்ற வலையொளி அலைவரிசையிலும் ஒளிபரப்பாகிறது.

## 8. அறிவியல் நகரம்

8.1. 1998 ஆம் ஆண்டில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு, விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் அறிவியல் கண்காட்சி மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கிடையே அறிவியலை பிரபலப்படுத்துவதன் மூலம் அறிவியல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதை முதன்மையான நோக்கமாக கொண்டு அறிவியல் நகரம் உருவாக்கப்பட்டது. அறிவியலை பிரபலப்படுத்தும் நோக்கத்தில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திற்கு நடமாடும் கோளரங்கம் அமைப்பதற்கு ரூ.9.00 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## 8.2. விருதுகள் வழங்கும் திட்டம்

### 8.2.1. தமிழ்நாடு வாழ்நாள் அறிவியல் சாதனையாளர் விருது

முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 60 வயது மேற்பட்டவர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியினை அங்கீகரிக்கும் மற்றும் கௌரவிக்கும் விதமாக இவ்விருது கடந்த 2000–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ.25,000/–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

### 8.2.2. தமிழ்நாடு முதுநிலை அறிவியலாளர் விருதுகள்

முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 45 வயது முதல் 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியினை அங்கீகரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் விதமாக இவ்விருது கடந்த 2016–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான

பரிசுத்தொகை ரூ.20,000/−க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

### 8.2.3. தமிழ்நாடு இளம் அறிவியலாளர் விருது

இவ்விருது, முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 45 மற்றும் 45 வயதிற்கு உட்பட்ட அறிவியலாளர்கள் / கல்வியாளர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக 2000 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத் தொகை ரூ. 20,000/−க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

### 8.2.4. சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது

இளம் மாணாக்கர்களை எந்தவொரு கல்வி முறையின் தூண்களாக வடிவமைப்பதில் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆகவே, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் சமுதாயத்தை அங்கீகரிக்கும் மற்றும் கௌரவிக்கும் விதமாக இவ்விருதினை அறிவியல்

நகரம் வழங்கிவருகிறது. இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ. 25,000/–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

### 8.2.5. ஊரக கண்டுபிடிப்பாளர் விருது

கிராமப்புற மக்களால் சமூகத்தின் நலனுக்காக குறைந்த பொருட்செலவில் பல கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, அறிவியல் நகரம் மேற்படி கண்டுபிடிப்பாளர்களை கௌரவிக்கும் விதமாக இவ்விருதினை வழங்கி வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ. 1,00,000/– காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

## 8.3. வருங்காலங்களில் செயல்படுத்தப்படும் செயற்பாடுகள் / திட்டங்கள்

### 8.3.1. சென்னை அறிவியல் விழா

மாநில அளவில் சென்னை அறிவியல் விழா நடத்தப்படும். இதன் அங்கமாக அறிவியல் கண்காட்சி, குழு விவாதங்கள், பிரபல விரிவுரைகள், அறிவியல்

செயல்முறை சோதனைகள், மற்றும் அறிவியலில் பொழுதுபோக்கு அம்சமாக பொம்மலாட்டம், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்காக வினாடி–வினா, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி ஆகியவைகளும் நடத்தப்படவுள்ளன.

### 8.3.2. கோடைக்கால பயிற்சி முகாம்

முதுநிலை அறிவியல் பயிலும் மாணாக்கர்களுக்கிடையே ஆய்வு மனப்பான்மையை உருவாக்கி ஊக்குவிக்கும் விதமாக தமிழக அளவில் கணிதவியல், வேதியியல் மற்றும் உயிரியல் துறைகளில் கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்தப்படவுள்ளன. மாணாக்கர்கள் 75% ஊரகப்பகுதிகளிலிருந்தும், மீதமுள்ள 25% நகர்புறங்களிலிருந்தும் தேர்வுச் செய்யப்பட்டு 21 நாட்கள் இம்முகாம்கள் நடைபெறும்.

## 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

9.1. அறிவியல் மைய செயல்பாடுகள் மூலம் பொதுமக்களிடையே அறிவியல் தொழில்நுட்பம் குறித்த புரிதல்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவும், நமது மாநிலத்தில் அறிவியல் மையங்களை நிறுவும் நோக்கிலும், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது நிறுவப்பட்டது. இயக்கிப் பார்க்கக் கூடிய ஆக்கப்பூர்வமான காட்சிப்பொருட்களுடன் சென்னையில் பி.எம்.பிர்லா கோளரங்கத்துடன் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தையும், திருச்சிராப்பள்ளியில் அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்தையும், வேலூரில் மாவட்ட அறிவியல் மையத்தையும், கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையத்தையும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் நிறுவியுள்ளது. வருகையாளர்களின் அறிவியல் புரிதல்களை மேம்படுத்துவது, அறிவியலின் மேன்மை செயல்முறை மற்றும் கொள்கைகளை பற்றி

விளக்குதல் போன்ற சிறந்த குறிக்கோள்களுடன் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வானவியல் கல்வி மற்றும் விண்வெளி குறித்த அறிவாற்றலை மாணவர்களுக்கு வழங்க சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மையங்களில் கோளரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

9.1.1. அறிவியல் மையங்களை நிறுவுதல், அறிவியல் காட்சிக்கூடங்கள், கோளரங்கங்கள் அமைத்தல், செயல்முறை அறிவியல் காட்சிப் பொருட்களின் மேம்பாடு பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் மற்றும் மாநிலம் தழுவிய அறிவியல் தொடர்பிலான நிகழ்ச்சிகள் நடத்துதல் ஆகியன தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

### 9.2. திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் அறிவியல் மையங்களில் புத்தாக்க மையங்கள்

கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையம், மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்திலும் நிறுவப்பட்டுள்ள புத்தாக்க மையங்களை மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்கள் 28.10.2021 அன்று திறந்து வைத்தார்.

### 9.3. மேற்கொள்ளப்பட்டுவரும் செயல்பாடுகள்

#### 9.3.1. திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தை நவீனமயமாக்குதல்

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றவாறு அற்புதமான படக்காட்சிகளைத் தரவல்ல எண்ணிலக்க ஒளிப்படக்கருவிகளுடன் கோளரங்கம் ரூ.3.00 கோடி நிதியில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. எண்ணிலக்கக் கோளரங்கக் கருவிகளை அமைக்கும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இந்த வசதி 2022–23 ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்படும்.

#### 9.3.2. நடமாடும் அறிவியல் கண்காட்சி பேருந்து

அறிவியல் கருத்துக்களை கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூர பகுதிகளில் பரவரலாக்குவதற்காக சிறிய கோளரங்கம் மற்றும் பலவகை இயக்கியறியும் வகையிலான காட்சிப்பொருட்களுடன் நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்து 1990 ஜனவரி முதல்

தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்தில் எண்ணிலக்கக் கோளரங்கக் கருவிகளுடன் 5 மீட்டர் விட்டம் கொண்ட நடமாடும் கோளரங்க அரைக்கோள அமைப்பு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் (சென்னை, அறிவியல் நகரத்தின் நிதியுதவி) வாங்கப்படவுள்ளது.

**9.3.3. புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம்**

புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 10 முதல் 15 வயதிற்குட்பட்ட மாணவர்களை எதிர்காலத்தில் அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். 2021-22 ஆம் ஆண்டுக்கு 1,596 மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு, புத்தாக்க விருதுகளும், தலா ரூ.10,000/- பணப்பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

### 9.3.4. 45 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியில் பங்கெடுத்தல்

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் நடத்திய 45 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது, இதில் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், 16 பிப்ரவரி, 2022 முதல் மார்ச் 6–ஆம் தேதி வரை நடமாடும் அறிவியல் பேருந்து மூலம் அறிவியல் காட்சிப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டது.

### 9.3.5. பாதுகாப்பு துறையின் தற்காப்பு தொழில்நுட்பத்தில் சுயசார்பு கண்காட்சி

சென்னை, ஆவடியிலுள்ள போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் சுயசார்பு என்ற பெருமைமிகு வாரக் கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

10.1. தமிழக அரசால் ஒரு தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், 1984ம் ஆண்டு உருவாக்கப்பட்டு, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. இம்மன்றம் நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் களப்பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

10.1.1. 2021-22 ஆம் ஆண்டில் ஆய்வாளர்கள், அறிவியலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பயன்பெறும் வண்ணம் பல்வேறு வகையான 15 அறிவியல் தொழில்நுட்ப திட்டங்கள் ரூ.345.79 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

10.1.2. கூடுதலாக, ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை மூலம் ரூ.90.93 இலட்சம் மன்றத்தின் நிர்வாக செலவினங்கள் மற்றும் குறிப்பிட்ட அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களுக்காகவும் பெறப்பட்டுள்ளது.

## 10.2. மன்றத்தின் செயல்பாடுகள்

### 10.2.1. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

2021-22 ஆம் ஆண்டு ரூ. 80.32 இலட்சம் செலவில், பல்வேறு துறைகளை சேர்ந்த 2,618 இறுதியாண்டு மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், 1,071 மாணவர் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 10.2.2. பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பு

இம்மன்றத்தில் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஒன்றிய அரசின் அறிவியல்

தொழில்நுட்பத் துறையால் ரூ.2.16 கோடி நிதி 2021–22 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை, அறிவியல் தொழில்நுட்ப புதுமைகளை பரப்புவதன் மூலம் உயர்த்துவதும், அறிவியல் மனப்பாங்கினை வளர்த்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### 10.2.3. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

பல்வேறு பிரிவுகளில் ஆய்வுகள் மேற்கொள்ள அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டு ரூ.41.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 15 ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.2.4. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மாவட்டந்தோறும் 9 ஆம் வகுப்பு பயிலும் 40 மாணவர்களுக்கு பல்வேறு ஆராய்ச்சி

மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 16 மாவட்டங்களிலிருந்து 640 மாணவர்கள் பயனடைவர்.

**10.2.5. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்**

இத்திட்டத்தின் மூலம் நமது மாநிலத்தின் 40 வயதுள்ள ஆய்வாளர்கள் புதிய ஆய்வு மற்றும் தொழில்நுட்பங்களை இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்படுவதுடன், மாதமொன்றுக்கு உதவித்தொகையாக ரூ.10,000 வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.3.50 இலட்சம் செலவில் 12 ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறுகின்றனர்.

**10.2.6. கருத்தரங்கு, அறிவியல் மாநாடு மற்றும் பயிற்சி பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்**

நமது மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வு குறித்து

பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் செலவில் 9500 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் 125 நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

### 10.2.7. அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்புதல்

அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்பும் நோக்கில், அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.10.00 இலட்சம் செலவில் சுமார் 50 நிகழ்வுகள் மூலம் 4,000 பேர் பயனடைகின்றனர்.

### 10.2.8. இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதியுதவி அளித்தல்

இளம் அறிவியலறிஞர்கள் தமது ஆராய்ச்சிகளின் முடிவுகளை பன்னாட்டு மற்றும் உள்நாட்டு

கருத்தரங்குளில் பகிர்ந்து கொள்ள இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. ஆண்டுதோறும் ரூ.2.50 இலட்சம் செலவில் 10 அறிவியலறிஞர்கள் பயன்பெறுவர்.

### 10.2.9. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

இத்திட்டம் அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளை தமிழில் வெளிக்கொணர ஊக்கமளிக்கிறது. ஆண்டுதோறும் ரூ.3.00 இலட்சம் செலவில் 15 அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 10.2.10. தமிழக அறிவியலறிஞர்கள் விருது (TANSA)

பத்து துறைகளில் அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ரூ.50,000/- ரொக்கமும், சான்றிதழும் வழங்கி தமிழக அறிவியலறிஞர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் ரூ.7.00 இலட்சம் செலவில் 10 அறிவியலாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

### 10.2.11. புத்தாக்கம் மற்றும் பொருள் உருவாக்கம்

அடையாளம் காணப்பட்ட புதுமையாக்க கண்டுபிடிப்புக்கு நிதி உதவியாக ரூ.50,000 முதல் ரூ.1,00,000 வரை வழங்கும் வகையில் ரூ.10.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 10.2.12. கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பாடங்களை நடத்தும் அரசுப் பள்ளி அறிவியல் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.9.00 இலட்சம் செலவில் 500 அறிவியல் ஆசிரியர்கள் பயனடைவர்.

### 10.2.13. புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

பொதுமக்களின் வாழ்வாதார திறன்களை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 18 பயிற்சிகள் ரூ.9.00 இலட்சம் செலவில் 480 பயனாளிகள் பயன்பெறும் வகையில் நடத்தப்படுகிறது.

## 10.2.14. தொழில்துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்

ஆண்டுதோறும் ரூ.22.50 இலட்சம் செலவில் இறுதியாண்டு பட்டயம் மற்றும் பொறியியல் பயிலும் மாணாக்கர்களின் திறமைகளை தொழில்துறைக்கேற்றவாறு மேம்படுத்துவதும், அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 10.2.15. ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்

நமது மாநிலத்திலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வு கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவை மேம்படுத்தப்பட இத்திட்டத்தின் வாயிலாக நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.15.00 இலட்சம் செலவில் 3 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வுக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுகிறது.

### 10.2.16. காப்புரிமை தகவல் மையம்

மன்றத்திலுள்ள காப்புரிமை தகவல் மையம் மூலம் 22 அறிவுசார் சொத்துரிமை பிரிவுகள் தமிழகத்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் அறிவுசார் சொத்துரிமை பதிவுகளை ஊக்குவிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உடன்குடி பனங்கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு பெற திருநெல்வேலி மாவட்ட பனைப் பொருள் கூட்டுறவு சம்மேளன நிறுவனம் மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் இம்மையத்தின் மூலம் பதிவு செய்வதற்காக அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

### 10.2.17. பள்ளி மாணவர்களுக்கான கணிதம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் செயல்பாடுகள்

இத்திட்டத்தின் கீழ், 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளி மாணவர்களுக்கு

அறிவியல், தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் கணிதம் செயல்பாடுகளை அறிந்துகொள்ள ரூ.19.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

## 11. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**11.1.** மாநிலத்தில் உருது மொழியை வளர்ப்பதற்கு தமிழ்நாடு மாநில உருது கழகம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தற்போது, மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் உருது மொழிப் பாடம் நடத்தப்படுகிறது.

**11.2.** இக்கழகத்தின் பணிகள், தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து கருத்தரங்கம் (Mushairas) நடத்துதல் மற்றும் உருது மொழியில் சிறந்து விளங்கும் கவிஞர்களுக்கும் மற்றும் மாநில அளவில் இடம் பிடித்தவர்களுக்கும் விருது மற்றும் பணப் பரிசு வழங்குதல் ஆகியவை ஆகும்.

## 12. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

12.1. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 2010, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் 16.07.2010 அன்று நிறைவேற்றப்பட்டு அதே நாளில் மன்றமும் உருவாக்கப்பட்டது.

### 12.2. முக்கிய செயல்பாடுகள்

- இம்மன்றத்தால், ஆங்கில மொழியில் (இணைப்புப்பால பயிற்சி) எனும் சிறப்புப் பயிற்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.
- ஆங்கில மொழி போதனையில் பிற மொழிச் சொல் பயன்பாடு முறைமைகளில் இன்றைய வளர்ச்சி குறித்து கேம்ப்ரிட்ஜ் பேராசிரியர்களைக் கொண்டு பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- "ஒருங்கிணைந்த உற்பத்தி வளர்ச்சியில் அடிப்படைத் திறன்" எனும் "பயிற்றுநர்களுக்கான பயிற்சி" 180 பொறியியல்

கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு, பாட ஏடுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- கற்பிக்கும் தரத்தை மேம்படுத்தவும், கல்வியின் தரத்தை உறுதிப்படுத்தவும், தேவைப்படும் கூடுதல் உள்கட்டமைப்பு, வலைதள வசதி, மனித வளம் மற்றும் துணைப் பணிகள் போன்றவைகளை கூர்ந்தாய்வு செய்ய ஏதுவாக மென்பொருள் ஸோஹோ மூலம் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு ஏ.டி.எல். எனப்படும் "கற்றலுக்கான தகவமைப்பு வடிவமைப்பு" எனும் தொழில் முறை பயிற்சி வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கம் வலைதள காணொளி மூலம் நடத்தப்பட்டது.

## 12.3. மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள்

- பொறியியல் தொழில்நுட்பத்தில் முனைப்பான களங்களில் தேசிய மற்றும் பன்னாட்டு பட்டறைகள்/ மாநாடுகள்/ கருத்தரங்குகள் நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்.
- அரசு தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் வாயிலாக பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பணியமர்த்து அலுவலர்களுக்கு தொழிற்சாலை பிரதிநிதிகளுடன் சேர்ந்து பயிற்சி அளித்தல்.

## 13. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்

13.1. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் ட்ரோன் அடிப்படையிலான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரியுடன் (M.I.T.) இணைந்து "தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்" நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கழகம் சட்ட அமலாக்கம், சுரங்கம், வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மேம்பாடு, நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் அவை சார்ந்த பிரிவு, பேரிடர் மேலாண்மை, சுகாதாரம், வனவியல், தொல்லியல், GIS மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகள் போன்றவற்றில் ட்ரோன் அடிப்படையிலான தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கும்.

13.2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.1.2022 அன்று தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். இந்தக் கழகம் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 100%

அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகையான ட்ரோன்களை வடிவமைத்தல், உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல் தவிர விவசாய பூச்சிக் கொல்லி தெளித்தல், கண்காணிப்பு, தேடல் மற்றும் மீட்பு, அளவீட்டு பகுப்பாய்வு போன்ற ட்ரோன் அடிப்படையிலான ஏராளமான சேவைகளையும் இந்த கழகம் வழங்கும். பல்வேறு முகமைகளுக்கு இக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் தீர்வுகள் / சேவை மற்றும் தயாரிப்புகள் இம்மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

13.3. தற்போது, சென்னையின் முக்கிய நீர்நிலைகளில் கொசுபுழு நாசினி (Larvicide) தெளிக்க, சென்னை பெருநகர மாநகராட்சிக்கு தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக்கழகத்தின் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கிரிஷி வித்யான் கேந்திராவிற்கு வேளாண் பணிகளுக்கான ட்ரோன் தெளிப்பான்

வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளுக்கு 50 கண்காணிப்பு ட்ரோன்களை வழங்குவதற்கும், தமிழ்நாடு காவல் துறையின் கடலோரப் பாதுகாப்புக் குழுவிற்கு ட்ரோன் வழங்குவதற்கும், சென்னை பெருநகர மாநகராட்சிக்கு கொசுபுழு நாசினி தெளிப்பு ட்ரோன் வழங்குவதற்கும் வழங்கல் ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

**முனைவர் க.பொன்முடி**
உயர்கல்வித் துறை அமைச்சர்

# அமைப்பு முறை வரைபடம்

- முதலமைச்சர்
  - அமைச்சர் (உயர்கல்வி)
    - தலைமைச் செயலாளர்
      - முதன்மைச் செயலாளர் (உயர்கல்வி)

## துறைகள்

- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- கல்லூரிக் கல்வி இயக்ககம்
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
- தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான மாநில இயக்குநரகம் (RUSA)
- அறிவியல் நகரம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்
- தமிழ்நாடு மாநில உருது கழகம்
- தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்
- தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்

## பல்கலைக்கழகங்கள்

- சென்னை பல்கலைக்கழகம்
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- அண்ணா பல்கலைக்கழகம்
- பாரதியார் பல்கலைக்கழகம்
- பாரதிதாசன் பல்கலைக்கழகம்
- அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
- அழகப்பா பல்கலைக்கழகம்
- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
- பெரியார் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
- திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
- அண்ணாமலை பல்கலைக்கழகம்

# தொழில்நுட்பக் கல்வி

## 2021-22 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.ஈ. / பி.டெக். / பி.ஆர்க். மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 11 | 4320 | 600 | 540 | 613 | 415 | 76 | 44 | 494 | 279 | 285 | 238 | 66 | 34 | 20 | 3 | 2154 | 1553 | 3707 |
| அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் | 3 | 2960 | 439 | 331 | 695 | 426 | 66 | 31 | 290 | 185 | 155 | 108 | 36 | 17 | 15 | 2 | 1696 | 1100 | 2796 |
| அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 20 | 8790 | 1189 | 921 | 914 | 619 | 138 | 45 | 729 | 414 | 468 | 298 | 88 | 43 | 15 | 12 | 3541 | 2352 | 5893 |
| சுயநிதி கல்லூரிகள் | 539 | 184278 | 24687 | 13697 | 25767 | 12421 | 2861 | 740 | 13747 | 5748 | 8913 | 5174 | 1045 | 616 | 384 | 218 | 77404 | 38614 | 116018 |
| **மொத்தம்** | **573** | **200348** | **26915** | **15489** | **27989** | **13881** | **3141** | **860** | **15260** | **6626** | **9821** | **5818** | **1235** | **710** | **434** | **235** | **84795** | **43619** | **128414** |

## தொழில்நுட்பக் கல்வி

### 2021–22 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்


| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 51 | 17935 | 135 | 40 | 3890 | 367 | 534 | 35 | 3990 | 328 | 1940 | 262 | 212 | 47 | 54 | 5 | 10755 | 1084 | 11839 |
| அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் | 34 | 14135 | 239 | 17 | 3049 | 235 | 465 | 12 | 1922 | 114 | 768 | 77 | 128 | 12 | 20 | 3 | 6591 | 470 | 7061 |
| இணைப்புப் பயிலகங்கள் | 4 | 253 | 11 | 1 | 53 | 1 | 5 | 0 | 29 | 0 | 38 | 0 | 0 | 0 | 1 | 0 | 137 | 2 | 139 |
| சுயநிதி கல்லூரிகள் | 406 | 135263 | 1790 | 224 | 9547 | 643 | 1479 | 61 | 7257 | 448 | 12360 | 1921 | 1217 | 265 | 421 | 115 | 34071 | 3677 | 37748 |
| உணவு மேலாண்மை மற்றும் உணவு வழங்கல் பயிலகங்கள் | 14 | 30 | 0 | 0 | 6 | 0 | 0 | 0 | 2 | 0 | 6 | 0 | 0 | 0 | 0 | 0 | 14 | 0 | 14 |
| மொத்தம் | 509 | 167616 | 2175 | 282 | 16545 | 1246 | 2483 | 108 | 13200 | 890 | 15112 | 2260 | 1557 | 324 | 496 | 123 | 51568 | 5233 | 56801 |
| ஆக மொத்தம் | | | 2457 | | 17791 | | 2591 | | 14090 | | 17372 | | 1881 | | 619 | | 56801 | | |

# கல்லூரிக் கல்வி


## 2021-22 ஆம் ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | சேர்க்கை விவரம் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இளநிலை | | முதுநிலை | | ஆராய்ச்சி படிப்பு | | கல்வியியல் | | ஆராய்ச்சி மேற்படிப்பு | | மொத்தம் | | ஆக மொத்தம் |
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 47976 | 61188 | 7544 | 15610 | 705 | 543 | 364 | 589 | 150 | 323 | 56739 | 78253 | 134992 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 30305 | 36754 | 5032 | 9587 | 143 | 212 | 145 | 1604 | 178 | 379 | 35803 | 48536 | 84339 |
| சுயநிதி கல்லூரிகள் | 68782 | 74648 | 9758 | 15789 | 331 | 530 | 20647 | 27791 | 170 | 430 | 99688 | 119188 | 218876 |
| மொத்தம் | **147063** | **172590** | **22334** | **40986** | **1179** | **1285** | **21156** | **29984** | **498** | **1132** | **192230** | **245977** | **438207** |


# இந்தியா, தமிழ்நாடு மற்றும் முக்கிய மாநிலங்களின் அண்மைக் காலக் கணக்கெடுப்பின் படி மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை



## அண்மைக் கால கணக்கெடுப்பின்படி மாநில வாரியான இரட்டை முறை பல்கலைக்கழகங்கள்



## அண்மைக் கால கணக்கெடுப்பின்படி முனைவர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்



## அண்மைக் கால கணக்கெடுப்பின்படி ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

